பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 20 திங்கட்கிழமை 06.12.2021 கதிர் 31

இனிது ரகசியம் அல்ல!

தேர்தல்களில் கிடைத்த பெரு வெற்றியினால் அதிகாரத் திமிரின் மமதையில் திளைத்த ராஜபக்ஷக்களுக்கு யதார்த்தம் – உண்மை நிலைவரம் – மெல்லப் புரியத் தொடங்கியிருப்பதாகத் தோன்றுகின்றது.

ஒரு புறம் – நாட்டின் பக்கம்02

# மக்களே! மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருங்கள்!

## யாழில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவிப்பு



(இ.கலையமுதன்)

பொதுமக்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு மக்கள் பிரதிநிதிகளிடம் வலியுறுத்த வேண்டும். அவர்கள் மூலமே நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவுகளை மேற்கொண்டு தேர்தலை விரைவாக நடத்த முடியும்.

– இவ்வாறு தேர்தல் ஆணைக் குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. மாகாண சபைகளுக்கான 2

# இலங்கை பல்தேசங்களைக் கொண்ட ஒரு நாடு; அதை ஏற்காவிடில் நீங்களும் சேர்ந்து அழிவீர்கள்!

## சிங்களத்துக்கு கஜேந்திரகுமார் எச்சரிக்கை



இலங்கை பல்தேசங்கள் கொண்ட ஒரு நாடென்பதை ஏற்றுக்கொள்ளாத வரைக்கும் – தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதை அங்கீகரிக்காத வரைக்கும் – நீங்கள் எங்களை மட்டுமல்லாது, உங்களையும் சேர்த்தே அழிக்கப்போகின்றீர்கள். நாட்டின் ஸ்திரத்தன்மை குலைந்து பிளவடையப்போவது சிங்களத் தலைவர் களாலேயே அன்றி தமிழ் மக்களால் அல்ல. இனப்படு கொலையைப் புரிந்தவர்களைப் பாதுகாத்துக்கொண்டு இருக்கும்வரையில் – இனப்படுகொலை என்பது தப்பிக் கொள்ளக்கூடிய ஒரு குற்றம் என நம்பிக்கொண்டிருக்கும் வரையிலும் – உங்களால் சமாதானத்தைக் கட்டியெழுப்பவும் முடியாது; பாதுகாப்பாக உணரவும் முடியாது.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (விவரமான செய்தி 7ஆம் பக்கத்தில்...)

## மீண்டும் அருவருக்கத்தக்க இடமாக மாறிவிடுமா யாழ்.ஆரியகுளம் திடல்?



(இ.கலையமுதன்)

மீள் உருவாக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடலானது சில பொதுமக்களின் அலட்சியச் செயற்பாடுகளால் மீண்டும் அருவருக்கத்தக்க 10

## 21 பேர் சாவு


நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 21 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 14 ஆண்களும், 7 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்தவகையில், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 3 ஆண்களும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 2

## நாட்டை மூடாமல் இருப்பது மக்களின் கையில் உள்ளது

### இராணுவத் தளபதி அறிவுறுத்து



கொரோனா ஒமிக்ரோன் மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உறுதியளித்தார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். 2

## அரிசி விலை அதிகரிக்கும்

எதிர்வரும் புத்தாண்டுக் காலத்தின்போது உள்நாட்டு அரிசியின் விலை 250 ரூபா வரை அதிகரிப்பதை யாராலும் தடுக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஹரிசன் 10

## கிளிநொச்சியில் மர்மப்பொருள் வெடித்ததில் இளைஞர் மரணம்!

### சிறுவன் ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி – உமையாள்புரம் பகுதியில் மர்மப்பொருள் ஒன்றைப் பரிசோதித்தபோது, அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அத்துடன் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

இந்த பகுதியில் நேற்று மாலை 3.30 மணியளவில் மர்மப்பொருள் ஒன்றை கிரைண்டர் ஒன்றால் 10

## மாத்தளை, புத்தளம் மாவட்டங்களிலும் காலூன்றத் தயாராகிறது மனோ அணி



கட்சியை சாத்தியமான அனைத்து மாவட்டங்களிலும் பலப்படுத்துவதுடன், ஜனநாயக மக்கள் முன்னணி 2

## இலங்கையரைக் கொன்றவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படவேண்டும்

### பாகிஸ்தான் பிரதமரிடம் மனோ எம்.பி. கோரிக்கை



பாகிஸ்தானில் இலங்கையரைக் கொடூரமாகக் கொலை செய்தவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமரிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

சியால்கோட்டில் இலங்கை நிர்வாக அதிகாரி பிரியந்த குமாரவை அடித்து, எரித்துக் கொலை செய்த அடிப்படைவாத கும்பலுக்கு, குறிப்பிட்ட காலவரைக்குள், அதிவேக சட்ட நடவடிக்கை மூலம், உச்சபட்ச மரண தண்டனை வழங்கப்படுவதைத் 2

## வவுனியா இளைஞர்கள் மூவர் முல்லைத்தீவுக் கடலில் மாயம்

### ஒருவரின் சடலம் மீட்பு

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, மணல்குடியிருப்பு கடலில் இறங்கிய மூன்று இளைஞர்கள் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 2



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருளாதார நிலைமை மிக, மிக மோசம். எந்தச் சமயத்திலும் தோற்றுப் போன – கடனிறுக்க வகையற்ற – நாடாக இலங்கை அறிவிக்கப்படக் கூடிய ஏது நிலைகள் உள்ளன.

மறுபுறம் – ஆளுந்தரப்பின், குறிப்பாக ராஜபக்ஷக்களின் – ஆதரவுத் தளமும் செல்வாக்கும் அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து விட்டது.

இன்னொரு புறம் – இலங்கைக்கான சர்வதேச ஆதரவு – ஒத்துழைப்பு – உதவி – எல்லாம் கூட வற்றத் தொடங்கி விட்டன. தமது கடைசி புதுடில்லி விஜயத்தின் போது இந்த யதார்த்தத்தை ராஜபக்ஷக்கள் சகோதரர்களில் யூனியரும், நிதியமைச்சருமான பஸில் ராஜபக்ஷவே நேரடியாக உணர்ந்து கொண்டு விட்டார்.

நேற்று முன்தினம் ஐக்கிய அரசு எமிரேட்ஸின் அபுதாபி நகரில் நடந்த இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் உச்சி மாநாட்டில் அங்குராரப்பண உரை நிகழ்த்திய மற்றொரு ராஜபக்ஷவான இலங்கை ஜனாதிபதி கோட்டாபய, வறிய நாடுகளுக்கு, கொரோனா நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு செல்வந்த நாடுகள் உதவ வேண்டும் என வலியுறுத்தியமை கூட, தமக்கான சர்வதேச ஆதரவுத் தளமும் சுருங்கி வருவது பற்றிய விசனத்தில் தான் என்று கூறப்படுகின்றது.

இப்படி எல்லாப் பக்கத்திலும் நெருக்கடி சூழ்ந்து, இக்கட்டு இறுகி வரும் நிலையில், ஆட்சிக் கூட்டின் பங்காளிகளான கூட்டுக் கட்சிகளைப் பகைப்பது மேலும் நிலைமைகளை மோசமாக்கி, 2015 ஜனவரி நிலைமைக்குத் தங்களை விரைவில் கொண்டு போய் நிறுத்தி விடும் என்ற களநிலையை ராஜபக்ஷ சகோதரர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர் என அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கோட்டாபய ராஜபக்ஷ அரசியலுக்குள் அண்மைக் காலத்தில்தான் வந்தவர். அவருடன் சேர்ந்து அச்சமயத்தில் அரசியலுக்குள் நுழைந்த சில முன்னாள் படைத்தரப்புகள், ஆட்சிக்கூட்டின் அரசியல் செல்நெறியை தேவையற்ற விதத்தில் குழப்பி விட்டன என்ற யதார்த்தம் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு இப்போது தெளிவாகத் தொடங்கியுள்ளது.

சரியோ, பிழையோ ராஜபக்ஷ சகோதரர்களில், தென்னிலங்கைத் தரப்புகளிடையே வெற்றிகரமாக அரசியல் செய்யும் தந்திரோபாயமும், சூட்சுமமும், இலாவகமும் – இவை எல்லாவற்றுக்கும் அப்பால் அதற்கான முகவசீகரமும் – கொண்டவர் மஹிந்த ராஜபக்ஷதான்.

முன்னால் வந்த காதை பின்னால் வந்த கொம்பு மறைப்பது போல, மொட்டுக் கட்சிக்குள் பின்னால் வந்த கோட்டாபயவுடன் சேர்ந்து வந்த தரப்புகளின் தலையீட்டால், அந்த கூட்டின் – ஆட்சித் தரப்பின் – மைய இழையான மஹிந்த ராஜபக்ஷவே ஓரங்கட்டப்பட்டார்.

அந்தப் பின்புலத்தில்தான் மொட்டுக் கூட்டுக்குள்ளான களேபரங்களும், குளறுபடிகளும், கோஷ்டி மோதல்களும் தீவிரமடைந்தன. பின்னால் வந்த கொம்புகள் முன்னே எழுந்த மஹிந்தவை மறைக்க, அவர் ஆற அமரப் பார்த்திருக்க வேண்டியவரானார்.

இப்போது நிலைமை கழுத்துக்குக் கயிறாக, வரத் தொடங்கியதும் 'ராஜபக்ஷக்கள் அண்ட் கோ' அவசர பாதிப்பு மீட்பு நிவாரணியாக மீண்டும் மஹிந்தவை முன்னிறுத்தத் தீர்மானித்திருப்பதாக ராஜபக்ஷக்களுக்கு மிக நெருக்கமான வட்டாரம் ஒன்று சில தினங்களுக்கு முன்னர் அடித்துக் கூறித் தகவல் வெளியிட்டது.

நான் நம்பவில்லை. பார்த்திருப்போம் என்று விட்டு விட்டேன்.

ஆனால் அது உண்மைதான் என்பது இப்போது தெரிகின்றது.

புதிய ஏற்பாட்டின்படி, ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ அபுதாபி சென்றிருக்கும் சமயம், மொட்டுக் கூட்டணியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களை – பங்காளிக் கட்சியினரைத் தவிர்த்து – மஹிந்த ராஜபக்ஷவும், பஸில் ராஜபக்ஷவும் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றனர்.

கூட்டுக் கட்சியின் எந்தத் தலைவர் என்ன சொன்னாலும் – பெரமுனவின் தலைவர்களை அவர்கள் தாக்கினாலும் கூட – பதிலடி கொடுக்க வேண்டாம், பங்காளிக் கட்சியினர் எவரையும் தாக்க வேண்டாம், வீண் கசப்புணர்வையோ, குழப்பங்களையோ ஏற்படுத்தவே வேண்டாம், உயர்ந்த பட்ச சகிப்புத் தன்மையைக் காட்டி பொறுப்புடன் செயற்படுங்கள் என்று, மஹிந்தவும் பஸிலும் ஆற, அமர 'அட்வைஸ்' கொடுத்திருக்கின்றார்கள்.

அதுவும் சுதந்திரக் கட்சி குறித்து பஸில் விசேட கவனம் எடுத்து, புள்ளிவிவரத் தகவல்களுடன் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

2018 உள்ளூராட்சித் தேர்தலில் 43 வீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்ற எமது கூட்டணி 2019 ஜனாதிபதித் தேர்தலில் 53 வீதத்துக்கும் அதிக வாக்குகளை எடுத்தமைக்கு சுதந்திரக் கட்சியே பிரதான காரணம் என அங்கே விளக்கியிருக்கின்றார் பஸில்.

இப்போது நிலைமையை சீர் செய்யத் தவறினால், இனி எப்போதும் சீர் செய்ய வாய்ப்புக் கிட்டாது என்பது ராஜபக்ஷக்களுக்குப் புரிந்து விட்டது.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்திலும் இந்த யதார்த்தப் புறநிலைமை ராஜபக்ஷக்களுக்கு விளங்குமானால் இந்தத் தீர்வு விரைவில் சிங்கப்பூரிலும் விட மேம்பட்டு விடும் என்பது உறுதி.

– மின்னல் –

## மக்களே!...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செலவீனங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றது. அது அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகின்றது. அங்கு ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மாத்திரமே இல்லை. ஆனால், அவர்கள் இருக்க வேண்டும் என்பது தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடு.

பழைய முறையிலோ அல்லது புதிய முறையிலோ தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என நாம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம்.

பொதுமக்கள் தேர்தலை நடத்துவதற்கு மக்கள் பிரதிநிதிகளிடம் வலியுறுத்த வேண்டும். அவர்கள் மூலமே நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவுகளை மேற்கொண்டு தேர்தலை விரைவாக நடத்த முடியும். நாம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் 40 யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

அவற்றில் சிறைச்சாலைகளில் விசேட வாக்களிப்பு முறை, அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோருக்கு முற்கூட்டிய வாக்களிப்பு முறை, செயற்படாத மக்கள் பிரதிநிதிகளை மீள அழைத்தல், உள்ளூராட்சி சபையின் காலப்பகுதியை நீடிக்கும் அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவிடம் வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயோதிபர்களுக்கு வீடுகளில் வைத்தே வாக்குகளை செலுத்தும் ஏற்பாடு, இளைஞர்களுக்கு கட்டாய கோட்டா முறை, தேர்தல் பிரசார செலவின ஒதுக்கீடு தொடர்பில் கட்டுப்பாடு, வேட்புமனுவில் ஏற்படும் நுட்பத் தவறுகளைக் கருத்தில்கொள்ளாமல் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பமளித்தல், தேர்தல் பிணக்குகளைத் தீர்க்க தேர்தல் நியாய சபையை உருவாக்குதல் போன்றன காணப்படுகின்றன.

பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகள் ஊடாக தங்களது யோசனைகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்வைக்க முடியும் – என்றார்.

(மற்றொரு செய்தி 05ஆம் பக்கத்தில்...)

## மாத்தளை,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியை ஏனைய பங்காளி கட்சிகளுடன் இணைந்து பலமான தேசிய அரசியல் இயக்கமாக கட்டி எழுப்பும் நோக்கில் கடுமையாக உழைக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழுவில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கட்சி தலைவர் மனோ கணேசன் தலைமையில் கொழும்பு பிரைட்டன் விடுதியில் நடைபெற்ற அரசியல் குழு கூட்டத்தின் போது புதிய பதவி நியமனங்கள் வழங்கப்பட்டு, கட்சி மற்றும் கட்சி உள்ளடங்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வளர்ச்சி தொடர்பில் பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலகம் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:–

கட்சியின் செயலாளர் நாயகமாக பணி செய்து வந்த கட்சியின் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.குருசாமி, கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் உப தலைவராக பணி செய்து வந்த கட்சியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சி. பாஸ்கரா, சிரேஷ்ட உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் புதிய இரண்டு இணை உப தலைவர்களாக எம். சந்திரகுமார், எஸ். சசிகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கட்சியின் பதவி நிலை வகிபாகங்கள் மீண்டும் அரசியல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன. அதன்படி கட்சியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் எம். வேலு குமார், பொதுச்செயலாளர் கே. டி. குருசாமி, தேசிய அமைப்பாளர் பிரகாஷ் கணேசன், நிர்வாக செயலாளர் பிரியாணி குணரத்ன, தவிசாளர் ஏ. ஜெயபாலன், நிதி செயலாளர் எஸ் கணேசன், சிரேஷ்ட உப தலைவர் சி.பாஸ்கரா, இணை உப தலைவர் எம். சந்திரகுமார், இணை உப தலைவர் எஸ்.சசிகுமார், பிரசார செயலாளர் எம்.பரணிதரன், மகளிர் விவகார செயலாளர் மஞ்சுளா பெருமாள், இளைஞர் விவகார செயலாளர் ஜி. விஷ்ணுகாந்த் ஆகிய பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து, எம். பாலசுரேஷ் குமார், லோரன்ஸ் பெர்னான்டோ, ஆர். கமலேஸ்வரன், எசக்கி குமார் ஜெயராமன், எம்.பரமசிவம், எஸ்.இருளப்பன், எஸ். பாலசச்சந்திரன், எம்.அன்டனி ஜெயசீலன் ஆகியோரும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் மாவட்ட அமைப்பாளர்களாக, எம் பாலசுரேஷ் குமார் – கொழும்பு, எஸ். சசி குமார் – கம்பஹா, எம். பரமசிவம் – கண்டி, எம். சந்திரகுமார் – இரத்தினபுரி, எம். பரணிதரன் – கேகாலை, எம். அன்டனி ஜெயசீலன் – களுத்துறை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெயர் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் உடனடியாக உட்கட்சி கட்டமைப்பு பணிகளைத் துரிதப்படுத்துமாறு அமைப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

மாத்தளை, புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு விரைவில் அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

## நாட்டை மூடாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய மாறுபாடு குறித்து வல்லுநர்கள் மாறு பட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர் என்றும், முழுமையான பகுப்பாய்வுக்குப் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவிப்பார்கள் என்றும் இராணுவத் தளபதி கூறினார்.

எதிர்கால பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது, தற்போதைய சுதந்திரமான இயக்கத்தைத் தொடர, மக்கள் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்று பதிலளித்தார்.

## வவுனியா இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

சம்பவத்தில் வவுனியா, மதகுவைத்த குளம் பகுதியைச் சேர்ந்த மனோகரன் தனுன் (வயது 27), வவுனியா தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த விஜயகுமாரன் தர்சன் (வயது 26) மற்றும் மதகுவைத்த குளம் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் சகிலன் (வயது 26) ஆகிய மூவருமே கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர்.

அவர்களைத் தேடும் பணி கடற்படையினர் மற்றும் மீனவர்களால் முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்டவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## இலங்கையரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தவிர எதுவும் எங்களை ஆறுதலபடுத்தாது மிஸ்டர் பிரைம் மினிஸ்டர் இம்ரான் கான் என்றும் மனோ கணேசன் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## 21 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

11 ஆண்களும், 7 பெண்களுமாக 18 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 461 ஆக உயர்வடைந்துள்ளது.





பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

“பெண்களுக்கெதிரான அனைத்து வன்முறைகளையும் தடுப்பதற்கு இன்றே உறுதி பூணுவோம்!. தனிமனித மாற்றமே சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும்!!.”

JSAC 16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை முஸ்லிம்களை பிளவுபடுத்த முயற்சி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் காட்டம்




இந்நாட்டு முஸ்லிம்களை பாரம்பரிய முஸ்லிம்கள், பாரம்பரியமற்ற முஸ்லிம்கள் என இரண்டு பிரிவாக வேறுபடுத்திக் காட்டுவதற்கு சிலர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காகத்தான் ஒரு நாடு; ஒரு சட்டம் என்ற செயலணியொன்றை அமைத்துக் கொண்டு மாவட்டம் மாவட்டமாகக் கூட்டம் நடத்தி திரிகின்றார்கள். இந்த விவகாரம் பெரும்பான்மை சமூகத்தவரிடத்திலும் கூட பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் எழுதிய, இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு நூலான 'திதுலன தாரக்கா' (மின்னும் தாரகை), கடந்த சனிக்கிழமை, கொழும்பு அல் - ஹிதாயா தேசியப் பாடசாலை பஹார்தீன் கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட போது, பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைப் பெண்கள் மத்தியில் சிறந்த படைப்பாளிகள் இருக்கின்றார்கள் என்ற விடயத்தை நாடறிய செய்ய வேண்டுமென்ற நோக்கில் இந்த தொகுப்பை வெளியிட்டுள்ள நூறுல் அயின் சாமான்யமான பெண்ணொருவர் அல்லர். அவருடைய முழுக் குடும்பத்தையும் கலைக் குடும்பம் என்றழைக்கலாம். கண்டி மாவட்டத்தில் உடுதெனிய என்ற ஊரைச் சேர்ந்த அவர், மொழிப் புலமை என்ற வகையில் சிங்களத்திலும், தமிழிலும் ஒரு சேர திறமை வாய்ந்தவர். அந்தக் கிராமத்தில் புகழ் பூத்த குடும்பத்தைச் சேர்ந்தவராவார்.

இந்நாட்டு அரசாங்கத்தின் ஊடகங்களின் தொடர்பாடல் விடயத்தில் முக்கியமான இலங்கை தகவல் திணைக்களத்தில் அவர் நீண்ட காலமாக பணியாற்றியிருக்கிறார். கொழும்பு மாவட்ட செயலகத்திலும் நூறுல் அயின் ஊடகத்துறையில் கடமையாற்றியுள்ளார். அவரது வெற்றியில் மிக முக்கிய பங்குதாரரான அவரது கணவர் நஜ்முல் ஹுஸைன் நல்ல இலக்கியவாதியும், சிறந்த கவிஞருமாவார்.

இந்த நிகழ்வில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் காதர் மொகிதீன் கலந்து சிறப்பிப்பதும் சாலப் பொருத்தமானதும், மகிழ்ச்சிக்குரியதுமாகும்.

பெண் படைப்பாளிகள் என்ற விடயத்தில், எழுத்தாளர் சம்மேளனத்தின் செயலாளர் கமல் பெரேரா இங்கு கூறியவாறு, பெண் எழுத்தாளர்களுக்கு எல்லைச் சுவர் எழுப்புவதில் ஆண்கள் முண்டியடித்துக் கொடுத்து தருகின்ற அவஸ்த்தையென்பது சங்கடமான விடயமாகவுள்ளது. அது மட்டுமல்லாது, உலமாக்கள் சிலரும், பள்ளிவாசல் நிருவாகங்களும் தலையிட்டு இவ்விடயம் தொடர்பில் பத்வா(மார்க்கத் தீர்ப்பு) வழங்குகின்ற விவகாரம் என்னைப் பொறுத்தமட்டில் மாறிவரும் இன்றைய சூழலில் முஸ்லிம் சமூகம் சம்பந்தமான தவறான பார்வையை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, எங்களது சமூகத்திலுள்ள பெண்களின் படைப்பாற்றலை ஊனப்படுத்துகின்ற செயலாகவும் அமைந்துவிடுவதை நான் பார்க்கின்றேன். தேவையற்ற இந்தத் தலையீடு என்ற விவகாரம் மிகவும் வேதனைக்குரியது. அவ்வாறு பெரும்பான்மையின சகோதரரான அவர் கூறுவதை அவரது புரிதலின் அடிப்படையிலேயே நாம் எடுத்து நோக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினை மிகவும் பூதாகரமாக வரக் கூடியது. இவ்விடயம் தொடர்பில் நாம் மிகவும் பக்குவ



மாக இருக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் எமது இந்தச் சமூகம் தீவிரவாதத்திற்கு உடந்தையான சமூகம் என்று நிறுவுவதற்கு காத்துக்கொண்டிருக்கும் பலருக்கு துரும்பாக அமையக் கூடிய விடயங்கள்தான் இவ்வாறான விவகாரங்களாகும். இத்தகைய சமூக கட்டமைப்புக்குள் இருக்கின்ற சீரழிவிலிருந்து எவ்வாறு எமது சமூகத்தை காத்துக்கொள்வது என்ற பெரிய சிக்கலுக்குள் நாங்கள் இருக்கின்றோம்.

நான் உலமாக்களை குறை கூறவில்லை. அண்மையில் தன்னை ஆலீம் என்று சொல்லிக்கொண்டு ஒருவர், முக நூலில் படுமோசமான பதிவொன்றையிட்டிருந்தார். அதாவது, சமூக வலைத்தளங்களில் பெண்கள் தமது படங்களை பதிவிட்டால் அத்தகையவர்களுக்கு நிச்சயமாக நரகம்தான் கிடைக்கும் என அவர் பதிவிட்டிருந்தார்

அதற்கு பதிலடிக் கொடுக்கும் விதத்தில் எனது உறவினரொருவர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக கடமையாற்றுகின்ற எழுத்தாளரும், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் புலமை வாய்ந்தவருமான லரீனா ஹக் என்பவர் விசனமடைந்து, நறுக்கென பேச்சு வழக்கில் நாட்டுப்புறப் பாணியில் அழகாக பதிவொன்றையிட்டுவிட்டார். நான் அதனைப் பார்த்துவிட்டு, அதற்கு கருத்துக் கூறினால் இந்தச் சமூகத்தில் உள்ள சிலர் என்னுடன் வரிந்துகட்டிக் கொண்டு வம்புக்கு வந்துவிடுவார்கள் என்றெண்ணி, லைக் மட்டும் கொடுத்துவிட்டு கருத்துக்கள் எதுவும் கூறாமல் மௌனித்து விட்டேன்.

உடனே அவர், என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பில் ஆத்திரம் பொங்க கதைத்தார். நான் பொறுமையாக செவிசாய்த்து விட்டு, இதன் பிறகு எதுவித அசம்பாவிதங்களும் உங்களை வந்தடையாமல் காத்துக்கொள்ளுங்கள் என்று கூறினேன். ஏனெனில், இன்று இத்தகைய விவகாரங்கள் மிக மோசமான திக்குகளிலே போய்க்கொண்டிருக்கின்றன.

நல்ல படைப்பாற்றல் கொண்ட எழுத்தாளர்களின் ஆக்கங்களிலுள்ள சில சூட்சுமங்கள், இலக்கிய நயம், கற்பனை வளம் போன்றவற்றை ரசிப்பதை விடுத்து, ஒரு சாரார் வேறு எங்கேயோ சென்று அவற்றிலுள்ள குறைகளைத் துருவித் துருவித் தேடித் திரிகின்றனர். இது மிகவும் சங்கடத்திற்குரிய விடயமாகும்.

சென்னையில் அடையாளம் பதிப்பகத்திலிருந்து நண்பர் சாதிக் இலங்கை வந்த போது என்னைச் சந்தித்தார். அப்போது அவர் மிகக் கவலையோடு என்னிடத்தில் ஒன்றைக் கூறினார் நான் இங்கு கவிஞரொருவரை தேடி வந்தேன். இலங்கையில் மிகவும் அபூர்வமான எழுத்தாற்றல் கொண்ட பெண் கவிஞரொருவரது புத்தகங்களை நாங்கள் ஒப்பந்தம் செய்து வெளியிடலாம் என தேடி வந்தேன். ஆனால், என்னை முந்திக் கொண்டு, 'காலச்சுவடு' பதிப்பகம் அவ்வொப்பந்தத்தை செய்து கொண்டார்கள். எனக்கு மிகவும் மன வருத்தமாக இருக்கின்றது எனக் கூறினார். யார் அந்த எழுத்தாளர்? எனக் கேட்டேன் அதற்கவர் அனார் என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? எனக் கேட்டார்.

அதற்கு பின்னர்தான் இந்த அனார் என்பவர் யார் என்பதைத் தெரிந்து கொண்டேன். நான் கிழக்கு மாகாணத்தை அடித்தளமாகக் கொண்ட பிரதானமான அரசியல் கட்சியின் தலைமையாக இருந்தும் கூட அவரை அறியாதிருக்கின்றேனே என நினைத்தேன். பின்னர் அந்த எழுத்தாளரது புத்தகங்களை அவராகவே அன்றிலிருந்து இலவசமாக எனக்கு அனுப்பி வைக்கத் தொடங்கினார்.

அந்த இஸ்ஸத் ரிஹானா எனப்படும் அனார் சாய்ந்தமருதில் மௌலவி ஒருவரின் மகளாவார். அவர் இன்று தமிழ் எழுத்துலகில் மூலை முடுக்கெங்கும் பேசப்படுகின்ற ஒரு நல்ல கவிஞராக முன்னேற்றம் கண்டுள்ளார். கடந்த மாதம் லண்டனிலிருக்கின்ற மூன்று முக்கியமான பல்கலைக்கழகங்களில் அவருடைய கவிதை நூல்களை ஆய்வு செய்து அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பகுப்பாய்வு நடத்தினார்கள். எமது நாட்டு எழுத்தாளர்கள் தொடர்பில் இவ்விடயத்தில் நாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

மீமெய்யியல்(Surrealism) என்ற விடயத்தை எமது நாட்டு கவிஞர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள் என்பதை எண்ணி நாங்கள் பெருமைப்பட வேண்டும்.



இதைவிடுத்து, தேவையில்லாத சர்ச்சைகளை கிளப்பிவிடக் கூடாது. இன்று பெரும்பான்மையினத்தவர்கள் கூட பெண் படைப்பாளிகள் தொடர்பில் விமர்சிக்குமளவுக்கு வந்திருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

முஸ்லிம் சமூகத்திற்குள் எங்கெங்கெல்லாம் பிழைகளை கண்டுபிடிக்கலாமென ஓடித்திரிகின்ற கூட்டமொன்று உலாவரும் காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

நாடாளுமன்றத்திலும் பெண்கள் சம்பந்தமாக நிறையப் புரளிகள் அவ்வப்போது கிளப்பப்படுகின்றன.

(09ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மகாவம்ச மனவமைப்பில் சிங்களம்

சில இனக் குழுமங்களுக்கு – இனக் கூட்டங்களுக்கு – தனித்துவமான பண்பியல்புகள், பழக்கவழக்கங்கள் சந்ததி சந்ததியாகத் தொடர்ந்து இருக்கும். அவற்றை நாம் பேச்சு மொழியில் 'பரவணிப் பழக்கம்' என்று கூறுவதுண்டு.

மகாவம்ச மனவமைப்பில் சிக்கிக் கிடக்கும் பௌத்த, சிங்கள தேசத்துக்கும் பேரினவாத மேலாண்மை வெறிப் போக்கு – அல்லது தீவிர சிந்தனை செல்நெறி – பரவணிப் பண்பியல் பாக நீடிக்கின்றது.

அந்த மேலாண்மைத் திமிர் சிந்தனையிலிருந்து – இருண்ட மனவமைப்புக்குக் குகைக்குள்ளிருந்து – பரந்த சிந்தனைப் போக்குக் கொண்ட சமரசத் தளத்துக்கு அது வரப் போவதில்லை. பௌத்த, சிங்கள பேரினவாத வெறி என்ற மயக்கம், அந்த இருண்ட மனச் சிறைக்குள்ளிருந்து அது வெளியே வர இடமளிக்கப் போவதில்லை.

இதுதான் இலங்கைத் தீவின் துன்பியல் யதார்த்த நிலைமையாகும்.

இதனையே வேறு வார்த்தையில் – வேறு சொல்லாடல்களில் – வேறு முறையில் – நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம்.

"இலங்கை பல தேசங்களைக் கொண்ட ஒரு நாடென்பதை ஏற்றுக் கொள்ளாத வரைக்கும் – தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதை நீங்கள் அங்கீகரிக்காத வரையிலும் – நீங்கள் தமிழர்களாகிய எங்களை மட்டுமல்லாது, உங்களையும் சேர்த்துத்தான் அழிக்கப்போகின்றீர்கள்."

"நாட்டின் ஸ்திரத்தன்மை குலைந்து, பிளவடையபோவது சிங்களத் தலைவர்களாலேயே அன்றி தமிழ் மக்களால் அல்ல.

"இனப்படுகொலைகளைப் புரிந்தவர்களைப் பாதுகாத்துக் கொண்டு இருக்கும் வரையில் – இனப்படுகொலை தப்பித்துக் கொள்ளக் கூடிய ஒரு குற்றம் என நீங்கள் நம்பிக் கொண்டிருக்கும் வரையில் – உங்களால் சமாதானத்தைக் கட்டி எழுப்பவும் முடியாது. பாதுகாப்பாக உணரவும் முடியாது." – என்று அழுத்தம் திருத்தமாக சிங்கள தேசத்துக்கு எடுத்துரைத்திருக்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

பெரும்பான்மை என்பது எண் கணிதக் கணக்கு. ஜனநாயக வாக்கெடுப்பில் அது உதவக் கூடும். ஆனால் நீதிமுறைமை என்பது எண் கணியத்தில் – எண்ணிக்கையின் முடிவில் – தங்கியிருப்பதில்லை.

எண் கணிய அடிப்படையில் – எண்ணிக்கை ரீதியில் – இந்தத் தீவில் பௌத்த, சிங்களவர்கள் அதிகம் உள்ள கணக்கை வைத்து, இந்தத் தீவு முழுவதும் பௌத்த, சிங்களவருக்கே உரியது என்று மேலாண்மைக் கணக்குப் போடுகின்றது சிங்கள தேசம். ஆனால் அது நீதிமுறைமையின் பாற்பட்ட உண்மையல்ல.

இந்தத் தீவில் கிறிஸ்துவுக்கு முந்திய வரலாற்று வேரோடல்களைக் கொண்டவர்கள் தமிழர்கள். இந்தத் தீவில் சிங்களவர்கள் கால் பதிக்க முன்னரே ஆதிக் குடிகளாக வசித்து வருபவர்கள் தமிழர்கள்.

இந்தத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும் தனியான மொழி, தனியான கலாசாரக் கோலங்கள், தனியான பண்பியல்புகள், தனியான வரலாறுகள், விசேடமான வாழ்க்கை முறைகள், தமேக்கேயுரித்தான பழக்க வழக்கங்களோடு – புவியியல் ரீதியாக ஒன்றுபட்ட வரலாற்றுத் தாயகத்தில் – சரித்திர காலம் தொட்டுத் தனித் தேசமாக வாழ்ந்து வரும் மக்கள் கூட்டம் அவர்கள்.

'தமிழர் தேசம்' என்ற கோட்பாட்டை ஏற்று, அந்தத் தேசத்துக்குரிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, ஒன்றுபட்டு ஒரு நாடாக, தமிழர் தேசத்துடன் சிங்கள தேசமும் ஐக்கியப்பட்டு வாழ இன்னும் வழி இருக்கின்றது.

இதனைத்தான் உள்ளக, வெளிப்புற சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டுடன் கடந்த சனியன்று நாடாளுமன்றத்தில் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனும் விளக்கியிருந்தார்.

அதன் யதார்த்தப் புறநிலைகளைத்தான் ஆணி அடித்தால் போல கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

ஆனால் பேரினவாத வெறியில் மூழ்கிக் கிடக்கும் சிங்கள தேசத்தின் காதில் இந்த நீதி – நியாய – நிலைமை ஏறமாட்டாது என்பதுதான் நாட்டின் துன்பியல் யதார்த்தமாகும்.

# பாரத தேசத்தின் அரவணைப்பில்தான் தமிழர்களுக்கு நிம்மதியான சுயாட்சி!

## தமிழ்நாட்டு நிகழ்வில் சிறிதரன் எம்.பி.உரை





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.06

ஈழத் தமிழர்களிற்கு ஒரு விடுதலை என்றால், ஈழத் தமிழர்களிற்கு ஒரு விடுதலை என்றால், ஈழத் தமிழர்களுக்கு நிம்மதியான சுயாட்சி என்றால், பாரத தேசத்தின் அமைப்பிலும், பாரத தேசத்தின் அரவணைப்பிலும் நம்பிக்கையிலுமே அது தங்கியுள்ளது எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தமிழ் நாட்டில் மதுரையை ஒட்டி வன்னியரசின் தந்தை இரத்தினசாமியின் நினைவுநாளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் உரையாற்றுகையில் -

எங்களுக்காக பாரத தேசத்தின் நம்பிக் கையையும், அழுத்தத்தையும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

தமிழ்நாட்டிலே பிறந்த ஒவ்வொரு தமிழனுக்கும் தமிழிச்சிக்கும் இருக்கின்ற கடமையிலேயே ஈழத்து மண்ணின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

நாங்கள் எப்போதுமே இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்லர். அல்லது பாரத தேசத்திற்கு எதிரானவர்கள் அல்லர். நாங்கள் இந்தியாவின் பாதுகாவலர்களாக இருக்கவே விரும்புகின்றோம். அந்நிய சக்திகள் இந்தியாவிற்குள் ஊடுருவ முயன்றால் அல்லது இந்தியாவிற்கு களங்கம் ஏற்படுத்த முனைந்தால் அதனை பாதுகாக்கின்ற சக்தியாக எப்போதும் ஈழத் தமிழர்கள் இருப்பார்கள். அதனால்தான் எங்கள் இருப்பும் உங்கள பாதுகாப்பும் பின்னிப் பிணைந்த ஒன்று என்றேன்.

நாங்கள் இன்று நிலம் அற்றவர்களாகவும், மொழியுரிமை அற்றவர்களாகவும் இருக்கின்றோம். அதாவது எமது மொழி தடுக்கப்படுகின்றது. எமது நிலம் பறிக்கப்படுகின்றது. நாம் வாழ்ந்த வரலாறு மறைக்கப்படுகின்றது. அதற்கும் மேலாக வாழும் உரிமையைக் கூட இழந்துகொண்டு இருக்கின்றோம். இவ்வளவு நெருக்கடிக்கும் மத்தியிலேயே எமது மக்கள் வாழ்கின்றனர். - என்றார்.

# சாணக்கியன் எம்.பியின் முயற்சியால் தமிழர் - முஸ்லிம் உறவில் திருப்பம்

## கிழக்கு மாகாண முன்னாள் பிரதித் தவிசாளர் தெரிவிப்பு

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன் முஸ்லிம் சமூகத்திற்காகவும் குரல்கொடுப்பது தமிழர் - முஸ்லிம் உறவில் திருப்பத்தை ஏற்படுத்தும் எனத் தான் உறுதியாக நம்புகிறேன் என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், மாகாண சபை முன்னாள் பிரதித் தவிசாளருமான எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன் போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்-

தமிழர் - முஸ்லிம் மக்கள் இணைந்து வாழ்கின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் எடுத்துவரும் முயற்சிகளையும் அவரது நல்ல சிந்தனைகளையும் நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

"அவர் முஸ்லிம் சமூகத்திற்காகவும் குரல் கொடுப்பதால், குறுகிய மனமுள்ள சிலர் அவரது போக்கை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றார்கள், அது வருத்தமளிக்கின்றது.

அவரைப் போன்றே மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர், முஸ்லிம்கள் சமூகங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒற்றுமைப்படுத்தும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும் - என்றார்.

# ஞானசார தேரர் கல்முனைக்கு விஜயம்

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளரும் 'ஒரே நாடு;ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவருமான கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று முன்தினம் இரவு கல்முனை பகுதியில் அமைந்துள்ள இரு வேறு இடங்களிற்கு கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் விஜயம் மேற்கொண்டார்.

'ஒரே நாடு;ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் மக்கள் கருத்தறியும் செயலமர்வுகள் கிழக்கு மாகாணம் திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற நிலையில் சனி மாலை இவர் தலைமையிலான குழுவினர் கல்முனை பகுதிகளுக்கு விஜயம் செய்தனர்.

கல்முனை தாருஸ்ஸபா நிறுவனத்தின் அழைப்பை ஏற்று வருகை தந்த இக்குழுவினர் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்முனை முஸ்லிம் முக்கியஸ்த்தர்களுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் சமூக சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதன் போது கல்முனையின் சமகாலத்தேவைகள் பற்றிய மகஜரொன்றும் அவரிடம் கையளிக்கப்பட்டமையுடன். நினைவுச்சின்னமும் வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார்.

எனினும் அங்கு ஊடகங்களுக்கு செய்தி சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

பின்னர் அங்கிருந்து வெளியேறிய ஞானசார தேரரை இடைமறித்து ஊடகவியலாளர்கள் விஜயத்தின் நோக்கம் தொடர்பில் வினவினர்.

இதன் போது ஊடகங்கள் மக்களிடம் உண்மையான விடயங்களை அறிக்கையிட வேண்டும் எனவும் தவறான தகவல்களை பரப்பி சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்க வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# ஜகத் ஜெயசூரிய, கபில ஹெந்தவிதாரண கரன்னகொட எல்லோரும் குற்றவாளிகளே!

## சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு



இராணுவத்தில் இருந்த ஜகத் ஜெயசூரிய, கபில ஹெந்த விதாரண, கரன்னகொட ஆகியோர் உண்மையில் குற்றவாளிகளே என முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இலங்கை இராணுவத்திற்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தில்ஒருவர்இருவர் தவறிழைத்துள்ளனர் என்பதை ஒப்புக் கொண்டாலும் அவர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லை என சரத் பொன்சேகா சுட்டிக் காட்டினார்.

எனவே பாடசாலை மாணவர்கள் 11 பேரை கடத்தி அவர்களின் பெற்றோரிடம் கப்பம் பெற்று இறுதியாக கொலை செய்த முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட மற்றும் ஜகத் ஜெயசூரிய, கபில ஹெந்தவிதாரண ஆகியோரை தண்டிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை கைது செய்யப்பட்டு சிறையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுவிக்க தாமும் இணக்கம் தெரிவிக்கிறேன் என சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

## பாகிஸ்தானில் குரூரமாக கொல்லப்பட்ட இலங்கையர்

# உயிரிழக்க முன்னர் கைகால்கள் சேதம் தலையில் மூளை வரைத் தாக்கியுள்ளனர்





பாகிஸ்தானில் குரூரமானமுறையில்படுகொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் மரணத்தின் பின்னர் இடம்பெற்ற பிரதேபரிசோதனைகள் மூலம் அவர் கொல்லப்பட்டமை குறித்த அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவரின்தலைமீதுபாரிய தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அவரது உடலை தீயிட்டுக் கொழுத்துவதற்கு முன்னர் அவரது கைகால்களை முற்றாகச் சேதப்படுத்தியுள்ளனர்.

அவரது தலையில் பல தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்றன. மூளை வரை அது சென்றதால் மரணம் நிகழ்ந்தது என பிரேதபரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைக் கும்பல் அவரது கைகால்களை முற்றாக அடித்துநொருக்கிவிட்டது என பிரதேபரிசோதனை அறிக்கையை மேற்கோள்காட்டி 'சாமா' தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

அவரது திசுக்களில் 99 வீதமானவை எரிகாயம் மற்றும் காயங்களால் சேதமாகிவிட்டன. காலின் அடிப்பகுதி தவிர உடலின் அனைத்துப் பாகங்களும் எரிந்துவிட்டன எனப் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரியந்தவின் உடலை இலங்கை தூதரகத்திடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.







# வாக்குரிமை விழிப்பூட்டல் குறித்து யாழில் நேற்றுக் கலந்துரையாடல்

## தேர்தல் ஆணைக்குழுவினர் பங்கேற்பு

**(கலையமுதன்)**


யாழ்ப்பாணம்,டிசெ.06

வாக்குரிமை விழிப்பூட்டலை மக்கள் மத்தியில் மேற்கொள்வதற்கான, 2022-2025 வரையான காலப்பகுதிக்கான மூலோபாயத்திட்டத்தைதயாரிப்பதற்கான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் அரச அலுவலர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கை தேர்தல் ஆணைக் குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா, தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயாக்க, தேர்தல் ஆணைக்குழுவின் செயலாளர் ஹேரத், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான மொஹமட், பத்திரண, திவாரட்ண, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன்,யாழ் மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டர்.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு தேர்தல் ஆணைக் குழுவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் இங்கே தெரிவிக்கப்பட்டமையுடன், பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் கேட்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

# வடமராட்சிக் கடலில் நேற்றுக் கரை ஒதுங்கிய இந்திய சாரதி அனுமதிப் பத்திரத்தால் பரபரப்பு
















**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,டிசெ.06

இந்திய (தமிழக) சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்று வடமராட்சிக் கடலில் கரை ஒதுங்கியதனால் பரபரப்பு ஏற்பட்டது. யாழ். குடாநாட்டில் அண்மைக் காலத்தில் கரை ஒதுங்கிய சடலங்களுக்கும் இந்த இந்திய சாரதி அனுமதிப்பத்திரத்துக்கும் தொடர்பு இருக்கலாம் என்று கருதப்பட்டது.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடற்கரையில் இந்தியப் பிரஜை ஒருவரின் சாரதி அனுமதிப்பத்திரம் நேற்றுக் காலை கரை ஒதுங்கியது.

இந்தியாவின் தமிழ்நாடு கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனந்தகுமார் பரமசிவம்(பிறந்த திகதி: 1974-03-21) என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் அது எனக் கண்டுகொள்ளப்பட்டது. இவர் அழகுபாண்டி தபாலகப் பிரிவு, ஆழம்பதூர் சிதம்பரம் தாலூக்காவை சேர்ந்தவர் எனவும் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த சாரதி அனுமதிப்பத்திரம் எவ்வாறு கடலிற்கு வந்தது என்பது தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெற்றன.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களின் தீவிர முயற்சியினால் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு உரியவர் தனது சாரதி அனுமதிப்பத்திரம் அண்மையில் பெய்த பெருமழையில் அடித்துச் சென்றதனை உறுதி செய்ததோடு தான் உயிருடன் உள்ளமையை நிரூபிக்கும் ஆவணத்தையும் அனுப்பி வைத்தார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 212

**550.கட்சிக்குள் வந்த சில காலங்களிலேயே சுமந்திரன் சந்தர்ப்பவாதியாகத் தலைமைப் பதவியை தான் குறிவைக்கிறாரே?**

அது மாத்திரமல்ல, அவர் நச்சுப் பாம்பாக தமிழ்த் தேசிய பரப்புகளைப் பல வீனப்படுத்த சிங்கள அரசினாலே உட்புகப்படுத்தப்பட்டு வளர்க்கப்படுபவர் என்றும் கூட பரப்புரை செய்யப்படுகின்றன. அவற்றுக்குக் காலமும், தமிழ் மக்களின் தலைவிதிகளும்தான் பதில் சொல்லவேண்டும். தன்னையும், தன் நிலையையும் உயர்த்திக்கொள்ள ஒருவன் விரும்புவதையும் பாடுபடுவதையும் குறைகூற முடியாது. ஆனாலும் அதனை எப்படி அடையமுடிகிறான் என்பதையும் பொறுத்துதான் அந்த தலைமைக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். அவரும் தமிழ் மக்களின் உணர்வு நரம்புகளை நாடி பிடித்து, அவற்றின் வலியையும் உள்வாங்கி யதார்த்தங்களில் அமுல்படுத்த வேண்டும்.

சிங்கள மக்களுக்கு எதிராக, அவர்களுக்குக் கஷ்டம் தரக்கூடிய வகையில், பாதகமாக எதுவும் செய்ய விரும்பமாட்டேன் என்பவை உயரிய நோக்கங்களாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களையோ, புலம்பெயரையோ அவை மூலம் நம்பிக்கைக்குக் கொண்டு வர முடியாது. அவர்கள் அவ்வளவு நம்பி நடந்தும், அப்படியாகவே பெரும்பான்மையினரைப் பார்த்தும், அந்தப் பெரும்பான்மை அவர்களை அப்படியாக வன்முறையற்ற போராட்ட காலங்களிலும் நடத்தியது கிடையாது.



பொன்.இராமநாதன்

இலங்கையின் தமிழ்த் தலைவர்கள் வைத்திருந்த தேசாபிமானத்தை சிங்கள தேசாபிமானமான பரிமாணத்துக்கு உட்படுத்தி, அவர்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கி, 1918 இல் தமிழ் மக்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் கொழும்பில் தருவது என்று வாக்குறுதியையே நாணயமற்று, நாக்கைப் பிரட்டி அவர்கள் பாவித்து, பின் தூக்கி எறிந்த கைங்கரியத்தைத்தான் 1966இலிருந்து இன்று வரை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.



பொன்.குமாரசாமி

ஒட்டுமொத்த இலங்கையின் விமோசனத்துக்காகவும் இலங்கை மக்கள் எல் லோரினதும் நல்வாழ்வுக்காகவும் அய ராது பாடுபட்டவர்கள் சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சேர்.அருணாச்சலம், குமா ரசாமி சகோதரர்கள். பின்னாளில் இவர்கள் எல்லோருமே விரக்தியுற்று, யாழ்ப்பாணத்தில் தங்களது பணிகளைச் செய்தார்கள். அவர்களும் ஓர் இனத்துவ அரசி யலுக்குள், முக்கியமாக அருணாசலம் தள்ளப்பட்டார் என்றால் அது ஒரு திடீர் நிகழ்வாக நடக்கவில்லை. தொடர்ச்சியாக சிங்கள மக்களின் இனத்துவேச பாரபட்சங்களும், கசப்புணர் வுகளும்தான் அதனைத் தூண் டின. இன்றைய தலைவர்களாக வரத் தெண்டிப்போரும் அன்றைய வரலாற்றை விரிவாகவும் அன்றில் ஓரள வாகவும் இந்த துரோகங்களையும், நம்பகத் தன்மைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

**551.அவர்கள் காலத்தில் என்ன துரோகங்கள் நடந்தன?**

சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சேர்.பொன்னம்பலம் அருணாச்சலம், பொன்னம்பலம் குமாரசுவாமி மூன்று பேரும் அரசாங்க சபையில் அங்கம் வகித்தவர்கள். கொழும்பிலேயே வாழ்ந்தமையை அங்கேயே சிவில் துறைகளில் பணியாற்றி பின் அரசியலிலும் ஈடுபட்டார்கள். அவர்களது அரசியல்புலம் முழு இலங்கையையும், எல்லா மக்களையும், தேசியத் தலைவர்களாகக் கொண்டது. தேசியத் தலைவர்களாக கெண்டாடப்பட்டார்கள். பின்னர் யாழ்ப்பாணத்திற்குச் சென்று பொதுப் பணிகளையும் அரசியல் பணிகளையும் இனத் துவ அடிப்படை யில் தான் செய் தார்கள். அப்படியான தேவையை அருணாச்சலம் போன்றோர் தங்களது கடைசிக் காலங்கள் வரை உணரவில்லை. அதற்கு முன், யாழ்ப்பாணத்தை அடித்தளமாகக் கொண்டு இயங்கிய யாழ்ப்பாண சங்கத்தில் (Jaffna Association) அதன் முக்கியஸ்தர்களாக சபாபதி, கனகசபை போன்றோர் இருந் தனர். அவர்கள் தமிழ் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தியவர்கள். எல்லாத் தரப்புக்களையும் இணைத்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் இயக்கமான இலங்கை தேசிய காங்கிரஸை (Ceylon National Congress) உருவாக்க அரு ணாச்சலம் பாடுபட்டுக் கொண்டிருந்தார். சிங்களப் பரப்பில் அப்பொழுது இரண்டு சங்கங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. ஒன்று "இலங்கை தேசிய சங்கம் (Ceylon National Association). அதன் தலைவர் ஜேம்ஸ் பீரிஸ். மற்றையது இலங்கை சீர்திருத்த சங்கம் (Ceylon Reform League). அதன் தலைவர் ஈ.ஜே. சமரவிக்கிரம. அவர்கள் இருவரும் அருணாச்சலத்துக்கும் சபாப திக்கும் எழுத்தில் தங்களது சங்கங்களின் சார்பில் உறுதிமொழி தருகிறார்கள் அதன்சாரம் "இலங்கை தேசிய சங்கம், இலங்கை சீர்திருத்த சங்கம் என்பவற்றின் தலைவர்கள் என்ற முறையில் யாழ்ப்பாண சங்கத்தால் முன்வைக்கப்படும் எந்தவொரு திட்டத்தையும் அது தீர்மானங்கள் உள்ளடக்கும் பல்வேறு கொள்கைகளிலிருந்தும் வேறுபடாத பட்சத்தில் நாம் ஏற்றுக்கொள்ளுவோம் என உறுதிமொழி அளிக்கிறோம். யாழ்ப்பாண சங்கம் உண்மையில் நியாயமற்ற எதனையும் வற்புறுத்தாது என நாம் நிச்சயமாக நம்புகிறோம். அத் தேர்தல் தொகுதி பிரதேசத்தை அடிப் படையாகக் கொண் டிருக்கும் வரையில் மேல்மாகாணத்தில் தமிழருக்கென ஆசனத்தை ஒதுக்குவதற்கான ஏற்பாட்டை நாம் முனைப்புடன் ஆதரிப்போம் என உறுதியளிக்கத் தயாராய் உள்ளோம்."

அந்த வாக்குறுதியினால் வடமாகாணத்திற்கு மூன்று ஆசனங்களும், கிழக்கு மாகாணத்தில் இரு ஆசனங்களும் தமி



பொன்.அருணாசலம்

ழுருக்கு. ஏனைய மாகாணங்களிலும் கொழும்பு மாநகர சபையிலும் இருக்கின்ற சந்தர்ப்பங்களுடன் மேல் மாகாணத்தில் பிரதேச தொகுதி அடிப்படையில் ஓர் ஆசனம் ஒதுக்கப்பட சாத்தியம் உள்ளது என்ற நம்பிக்கையில் இலங்கை தேசிய சங்கம், இலங்கை சீர்திருத்த சங்கம், யாழ்ப்பாண சங்கம் மூன்றும் சேர்ந்து இலங்கை தேசிய காங்கிரஸை 11 டிசெம்பர் 1919 இல் உருவாக்கி அதன் தலைவராக அருணாச்சலம் தெரிவானார். பின்னர் நடந்த துரோகமோ வேறு.



எம்.ஏ.சுமந்திரன்

# இலங்கை பல்தேசங்களைக் கொண்ட ஒரு நாடு; அதை ஏற்காவிடில் நீங்களும் சேர்ந்து அழிவீர்கள்!

## நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் கர்ச்சனை



இலங்கை பல்தேசங்கள் கொண்ட ஒரு நாடென்பதை ஏற்றுக்கொள்ளாத வரைக்கும் - தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதை அங்கீகரிக்காத வரைக்கும் - நீங்கள் எங்களை மட்டுமல்லாது, உங்களையும் சேர்த்தே அழிக்கப்போகின்றீர்கள். நாட்டின் ஸ்திரத்தன்மை குலைந்து பிளவடையப்போவது சிங்களத் தலைவர்களாலேயே அன்றி தமிழ் மக்களால் அல்ல. இனப்படுகொலையைப் புரிந்தவர்களைப் பாதுகாத்துக்கொண்டு இருக்கும்வரையில் - இனப்படுகொலை என்பது தப்பிக்கொள்ளக்கூடிய ஒரு குற்றம் என நம்பிக்கொண்டிருக்கும் வரையிலும் - உங்களால் சமாதானத்தைக் கட்டியெழுப்பவும் முடியாது; பாதுகாப்பாக உணரவும் முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சனியன்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ரோம் சாசனத்தின் 6 ஆவது உறுப்புரையானது இனப்படுகொலைக் குற்றம் என்பதனை வரையறை செய்கின்றது. இந்த சர்வதேச சாசனத்தை இலங்கை அரசு தொடர்ந்து ஏற்க மறுத்து வருவதற்கான காரணம் இன்று வெளிப்படையாகின்றது. அன்று யுத்தம் அதன் உச்சக்கட்டத்தில் இருந்தபோது நடைபெற்ற சம்பவங்களை கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மீதான விவாதத்தின்போது தெளிவாக வெளிப்படுத்தியிருந்தேன்.

அங்கு போர் வலயத்தினுள் சிக்கியிருந்த மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்ததை ஏற்றுக்கொள்வதெனும் முடிவுக்கு 2009 மே16 இரவு எட்டு மணியளவில் இலங்கை அரசு கொள்கையளவில் முன்வந்திருந்தது. ஆனால், அங்கு சிக்கியிருந்த ஏறத்தாழ ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்களைப் பாதுகாத்து அவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வரும் செயற்பாடு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜோர்டானில் நடைபெற்றுக்கொண்டிருந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில் இருந்து மே 17ஆம் திகதி திரும்பி வந்தவுடன் ஆரம்பிக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்தச் செயற்பாடு நடைபெறவில்லை. 17ஆம் திகதி காலை போர் வலயத்தினுள் சிக்கியிருக்கும் மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்பதை நான் விடுதலைப் புலிகளுக்கு அறிவித்திருந்தேன்.

ஆனால், 16ஆம் திகதி இரவு 10 மணியளவில் மிகவும் பயங்கரமான செய்திகளைத் தாங்கிய பல தொலைபேசி அழைப்புகள் வன்னியிலிருந்து எனக்கு வந்தன. ஆயுதங்களை மௌனிப்பது எனும் புலிகளின் முடிவை அரசு ஏற்று மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைக்கு ஒத்துக்கொண்ட பின்னரும் கூட, போர் வலயத்தை நோக்கி எழுந்தமானமாக கடும் உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஆட்டிலறித் தாக்குதல்கள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன என அங்கிருந்து வந்த தொலைபேசி அழைப்புகள் கூறின.

நான் உடனடியாகவே 16- 05 - 2009 இரவு 10.30 மணியளவில் பஸில் ராஜபக்ஷவுடன் தொடர்புகொண்டு நீங்கள் மக்களின் பாதுகாப்புக்காகவும் நலனுக்காகவுமே அனைத்தையும் (இந்தப் போரை) செய்கின்றோம் எனக் கூறிக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால், உங்கள் அரசு ஒத்துக்கொண்டால் அங்கிருக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாப்பாக நாளையே அழைத்துவரக்கூடிய கூடிய நிலைமை இருக்கும்போது ஏன் பொதுமக்கள் மீது இப்படியான கொடூரமான ஆட்டிலறித் தாக்குதல்களைப் பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்கின்றது? எனக் கேட்டிருந்தேன்.

அவர் தான் பாதுகாப்பு அமைச்சோடு பேசி ஒரு முடிவுக்கு வருகிறேன் என என்னிடம் கூறினார். ஆனால், அவர் மீண்டும் என்னிடம் தொடர்பு கொண்டு அடுத்த பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டம் 17ஆம் திகதி நடக்கும் வரை இந்தத் தாக்குதல் திட்டம் தொடரும் எனப் பாதுகாப்பு அமைச்சு தனக்கு அறிவித்ததாக அவர் கூறினார். இந்தப் பயங்கரமான நிலைமையின் தாற்பரியத்தை நம்புவதற்கு நீங்கள் மறுக்கலாம். அப்படி நடந்தது என்பதை கூறக் கூட நீங்கள் மறுக்கலாம். ஆனால், அதற்கெல்லாம் நேரடி சாட்சியாக நான் இருக்கின்றேன்.

போர்வலயத்துள் சிக்கியுள்ள ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டும் தமதுஆயுதங்களை மௌனிக்கத் தயாராக இருப்பதாக 16 மே பிற்பகல் 4 மணியளவில் மிகத் தெளிவாக என்னூடாக புலிகள் அரசுக்கு அறிவித்திருந்தார்கள். ஆனால், பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களைப் பாதுகாக்கும் அந்த முயற்சியை ஏற்க அடியோடு மறுத்துவிட்டது. மாறாக கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தினார்கள். அதற்கு நான் சாட்சி. மேலும் கடந்த வருடம் இந்த அவையில் உரையாற்றிய சரத் பொன்சேகா, போரின் இறுதி நாள் வரை கடுமையான கனரக ஆயுதத் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன என உரிமை கோரியிருந்தார்.

இப்படியாக போரில் ஈடுபட்ட ஒரு தரப்பு தமது ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்திருந்த நிலையில் நீங்கள் அதை ஏற்க மறுத்து தொடர்ந்தும் கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தியதென்பது மக்களின் உயிரிழப்பை முடிந்தளவு அதிகரித்து, அந்த மக்களை முழுமையாகவோ ஆகக்குறைந்தது பகுதியாகவோ அழிப்பது என்னும் ஒரே நோக்கத்துக்காகவே என்பது தெளிவாகின்றது.

போரில் ஈடுபட்ட ஒரு தரப்பு ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்த போதிலும், போர் வலயத்தில் மக்கள் சிக்குண்டிருப்பதை உறுதியாகத் தெரிந்து கொண்ட பிறகும் இப்படியாக அந்தப் பிரதேசம் மீது பீரங்கித் தாக்குதலை நடத்தியது இனப்படுகொலை என்பதில் சந்தேகமில்லை. இது ஒரு சாதாரணமான ஒரு குற்றம் அல்ல. எவரும் எண்ணிப் பார்க்க முடியாத மிகப் பயங்கரமான குற்றம் இது.

பாதுகாப்பு அமைச்சு, இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை அனைத்தும் இந்த இனப்படுகொலையின் குற்றவாளிகளே. அனைவரும் இலங்கையர்கள் எனச் சிந்திக்க வேண்டும் என நீங்கள் கூறிக்கொள்கின்ற இந்த சமயத்தில் இலங்கையில் இப்படியான ஒரு குற்றம் நடந்ததா? இல்லையா? என உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவாவது ஒரு சர்வதேச சுயாதீன விசாரணையை நடத்துவது உங்களது பொறுப்பில்லையா?

ஆனால், நாம் இது குறித்துபேச முற்படும் போதெல்லாம நீங்கள் எழுந்து நின்று எந்தவொரு குற்றத்தையும் நீங்கள் இழக்கவில்லை என்றே கூறுகிறீர்கள். அப்படி நீங்கள் குற்றம் இழைக்கவில்லையெனில் எதற்கு அஞ்சுகிறீர்கள்? ஏன் ஓடி ஒழிகிறீர்கள்? நீங்கள் இனப்படுகொலை புரியவில்லையென்றால் போர் முடிந்து 13 வருடங்கள் ஆன பிற்பாடும் விசாரணைகளுக்கு பயந்து ஏன் ஓடி ஒழிகிறீர்கள்?

உண்மையான பொறுப்புக்கூறல் இடம்பெறும் வரைக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் தாம் பாதுகாப்பாக இருப்பதை உணரும் வரைக்கும் இங்கு சமாதானம் என்பது எட்டாக்கனியே என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா? அதுவரைக்கும் அனைவரும் ஒருங்கிணைந்த ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என நினைக்கிறீர்களா? இனப்படுகொலை என்பது வெறுமனே மக்களைக் கொல்வது மட்டும் அல்ல. இறுதிப் போர் அதன் உக்கிர நிலையை அடைய முன்பு வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் ஏறத்தாழ 4 லட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனால், அரசானது அங்கு 70 ஆயிரம் பொதுமக்களே இருக்கின்றனர் எனக் கூறிக்கொண்டு 70 ஆயிரம் பேருக்கான உண வையும்மருந்தையுமே அனுப்பி அந்த மக்களைப் பட்டினி போட்டது. அதன் மூலம் அந்த மக்கள் முழுமையாகவோ பகுதியாகவோ அழியக்கூடிய நிலையை உருவாக்கியிருந்தீர்கள். இது இனப்படுகொலையே - என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் சரத் வீரசேகர கொதித்தெழுந்து கஜேந்திரகுமாரின் பேச்சைக் குழப்பி தாம் இனப்படுகொலை புரியவில்லை என்றும், பொது மக்களை மீட்டோம் என்றும் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய கஜேந்திரகுமார் எம்.பி.-

இனப்படுகொலையில் நீங்களும் ஒரு குற்றவாளி என்றே நாம் கூறுகின்றோம். இனப்படுகொலை நடந்ததாக நான் பொய் கூறுகிறேன் என நீங்கள் கூறினால் அதை ஏன் நீங்கள் சர்வதேச நீதிமன்றத்துக்குத் துணிவுடன் சென்று சாட்சிகளைக் கொடுக்கக் கூடாது? இனப்படு கொலை செய்யவில்லையெனில் ஏன் நீங்கள் பய மின்றி ரோம் சாசனத்தில் கையெழுத்திடக்கூடாது? நீங்கள் குற்றமற்றவர்களெனில் ஏன் அஞ்சுகிறீர்கள்? நாங்கள் தமிழ் பிரதிநிதிகள் இந்தச் சபையில் கூறுவதைக்கூட கூறவிடாமல குழப்புகிறீர்கள். இது எதற்காக? நீங்கள் குற்றமற்றவர்களெனில் ஏன் பயப்படுகின்றீர்கள்?

இன்று போர் முடிந்து 13 வருடங்கள். ஆனாலும் வடக்கு, கிழக்கில் பாரிய இராணுவக் கட்டமைப்பை பேணிக்கொண்டு இருக்கிறீர்கள். வடக்கு, கிழக்கில் 10 பேருக்கு 1 என்ற விகிதத்தில் இராணுவம் நிலைகொண்டிருக்கின்றது. வன்னியில் 1 க்கு ஐந்து எனும் விகிதத்தில் இராணுவம் இருக்கிறது. இப்படி இராணுவத்தை நிலை நிறுத்துவதன் மூலம் மக்களை ஒரு பயப்பிராந்திக்குள் வைத்திருக்க முயல்கிறீர்கள். போர் முடிந்து 13 வருடங்கள் ஆகிவிட்ட பின்னரும் நீங்கள் செய்த குற்றங்களின் ஆதாரங்கள் வெளியே சென்றுவிடும் என அஞ்சுகிறீர்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் தனது கடந்த அறிக்கையில் குறிப்பிட்டபடி இலங்கைப் படையினரின் குற்றங்கள் குறித்து ஒரு லட்சத்து 20 ஆயிரம்கோவைகள்தம்மிடம்இருக்கின்றனஎனக்கூறியதையிட்டு அஞ்சுகிறீர்கள். நீங்கள் உண்மைகளைக் கண்டு அஞ்சுகிறீர்கள். உண்மைகளைக் கண்டு பயந்து ஓடிக்கொண்டு இருக்கும் வரையில் இனப்படுகொலை புரிந்தவர்களை பாதுகாத்துக்கொண்டு இருக்கும் வரையில் இனப்படுகொலை என்பது தப்பிக்கொள்ளக்கூடிய ஒரு குற்றம் என நம்பிக்கொண்டிருக்கும் வரையிலும் உங்களால் சமாதானத்தைக் கட்டியெழுப்பவும் முடியாது; பாதுகாப்பாக உணரவும் முடியாது.

உங்கள் சரி,பிழைகளைக் கண்டுகொள்ளாமல் உங்களை ஆதரிக்கக் கூடியவர்களை நண்பர்களாக்கி இனப்படுகொலைக்கான நீதியை வழங்காமல் இருப்பதை உறுதிப்படுத்தி கொண்டு உங்கள் பிழைகளை மறைக்கக்கூடிய கூட்டாளிகளை பெறுவதற்காக உங்கள் நாட்டையே நீங்கள் கூறுபோட்டு விற்கத் தொடங்கியிருக்கிறீர்கள்.

நீங்கள் நேசிப்பதாக கூறுகின்ற இந்த நாட்டின் ஆத்மாவையே ஒவ்வொரு நாளும் விற்கத் தொடங்கியிருக்கிறீர்கள். இன்று இலங்கை பங்களாதேஷத்திடமும் கையேந்துகின்ற நிலைமை வந்திருக்கின்றது. போர் முடிவடைந்து 13 வருடங்களில் நீங்கள் சாதித்தது இதைத்தான். அதைப் பார்க்க வெட்கமாக இல்லையா? இந்தத் தீவில் இருக்கும் ஒவ்வொரு தேசங்களும் தம்மைப் பாதுகாப்பாக உணரும்போதுதான் இது உண்மையான இலங்கை.

இந்தத் தீவில் இருக்கும் ஒவ்வொரும் தேசங்களும் தம்மைப் பாதுகாப்பாக உணரும்போதுதான் தாம் இலங்கையன் என ஒருவனால் விசுவாசமாக உணர முடியும். அதுவரைக்கும் நீங்கள் விரும்புகின்ற அந்த இலங்கை எனும் நாட்டை உருவாக்கிக்கொள்ள உங்களால் முடியாது.

மாறாக நீங்கள் இனவாத பாதையிலேயே தொடர்ந்தும் சென்று இனங்களுக்கிடையிலே பிரிவினையையும் குரோதத்தையும் வளர்க்கிறீர்கள். அப்படி இந்த மக்களைப் பிளவுபடுத்தி வைப்பதன் மூலமே உங்கள் வாக்குவங்கியை நீங்கள் நிலைநிறுத்திக் கொள்கிறீர்கள். ஆனால், இன்று இந்த நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளால் சாதாரண சிங்கள் மக்களே என்றுமில்லாதவாறு முதல் தடவையாகத் தமது தலைவர்களுக்கு எதிராக கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். நானோ அல்லது எனது சக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ சொல்வதை இனவாத பேச்சு என இதுவரை காலமும் சொல்லித் தள்ளி வைத்த சாதாரண சிங்கள மக்களும் இன்று உண்மையை உணரத் தொடங்கியிருக்கிறார்கள். நாம் சொல்பவற்றை செவிமடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

தமிழர்கள் குறித்தும், தமிழர்களின் கோரிக்கைகள் குறித்தும் சாதாரண சிங்கள மக்களுக்கு அவர்களின் தலைவர்களால் சொல்லப்பட்டு வந்த பொய்கள் குறித்து கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிலையில் தொடர்ந்தும் நீங்கள் இந்த அராஜகப் போக்கிலேயே போக முடியாது. மாறாக இந்தப் போக்கிலேயே போனால் நாட்டின் ஸ்திரத்தன்மை குலைந்து பிளவடையப்போவது சிங்களத் தலைவர்களாலேயே அன்றி தமிழ் மக்களால் அல்ல.

(09ஆம் பக்கம் பார்க்க)




# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

49

### கூகுள் கிளாஸ்ரூம்

மெய்நிகர் வகுப்பறைகள் அண்மைக்கால பயன்பாட்டின் அதிகரிப்பு அதன் உருவாக்கம் அதுவும் கொவிட் தாக்கத்திற்கு பின்னானது என்ற எண்ணத்தை பலரிடம் உருவாக்கியிருக்கிறது. உண்மையில் இந்த மெய்நிகர் வகுப்பறை எண்ணம் கொவிட் தாக்கத்திற்கு முன்னரே இனங்காணப்பட்டு நடைமுறையில் இருந்து வந்தது. கொவிட் நெருக்கடி இதன் பயன்பாட்டை அதிகரித்து விட்டது என்றே சொல்லலாம். தீடீரென இதன் பாவனை அதிகரித்து வேகமெடுத்திருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் 2004 ஆம் ஆண்டு கூகிள் நிறுவனம் அறிமுகம் செய்த கூகுள் கிளாஸ்ரூம் பற்றிப் பார்க்கலாம். கூகுள் கிளாஸ்ரூம் என்பது பாடசாலைகளுக்காக கூகுள் உருவாக்கிய இலவச கலப்புக் கற்றல் தளமாகும், இது கற்றல் பாடங்களை உருவாக்குதல், விநியோகித்தல் மற்றும் வகைப்படுத்தல் ஆகியவற்றை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கூகுள் வகுப்பறையின் முதன்மை நோக்கம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே கோப்புகளைப் பகிரும் செயல்முறையை ஒழுங்குபடுத்துவதாகும். இந்தத் தளத்தில் 2021 ஆம் ஆண்டு வரையான தரவுகளின் படி அண்ணளவாக 15 கோடி பயனர்கள் கூகுள் வகுப்பறையைப் பயன்படுத்துகின்றனர்.

கூகுள் கிளாஸ்ரூம் பலவேறு கூகிளின் வசதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது கூகிளின் தயாரிப்புக்களான கூகுள் டாக்ஸ், கூகுள் தாள்கள், கூகுள் ஸ்லைடுகள், ஜிமெயில் மற்றும் கூகுள் கலண்டர் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த வசதிகள் மூலம் மாணவர் மற்றும் ஆசிரியர் தொடர்புகளை நிர்வகிப்பதற்கான ஒருங்கிணைந்த தளமாக இது விளங்குகிறது எனலாம். இதில் ஒவ்வொரு வகுப்பும் அந்தந்த பயனரின் கூகுள் டிரைவில் ஒரு தனி கோப்புறையை உருவாக்குகிறது, அங்கு மாணவர் ஒரு ஆசிரியரால் தரப்படுத்தப்பட்ட வேலையைச் சமர்ப்பிக்கலாம். பணிகள் மற்றும் நிலுவைத் திகதிகள் கூகிள் கேலெண்டரில் சேர்க்கப்படும், அங்கு ஒவ்வொரு பணியும் ஒரு வகை அல்லது தலைப்பைச் சார்ந்தது. இதில் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரின் முன்னேற்றத்தையும் கண்காணிக்க முடியும், மேலும் மதிப்பீடு செய்து ஆசிரியர்கள் கருத்துகள் மற்றும் மாணவர் நிலைகளைக் கணிக்க முடியும்.

கூகுள் கிளாஸ்ரூம் ஒகஸ்ட் 12, 2014 அன்று பகிரங்கமாக வெளியிடப்பட்டது. 2018 ஆம் ஆண்டில், கூகிள் கிளாஸ்ரூமில் ஒரு பெரிய மறுவடிவமைப்பை அறிமுகப்படுத்தியது. இதில் ஒரு புதிய வகுப்புப் பாடப் பிரிவைச் சேர்ப்பது, தரப்படுத்தல் இடைமுகத்தை மேம்படுத்துவது, மற்ற வகுப்புகளிலிருந்து வகுப்புப் பாடங்களை மீண்டும் பயன்படுத்த அனுமதிப்பது மற்றும் தலைப்பு வாரியாக உள்ளடக்கத்தை ஒழுங்கமைக்க ஆசிரியர்களுக்கான அம்சங்களைச் சேர்ப்பது ஆகியவை அடங்கியிருந்தன. 2019 ஆம் ஆண்டில், கூகுள் 78 புதிய விளக்கப்பட வசதிகளை அறிமுகப்படுத்தியது மற்றும் கிளாஸ்வொர்க் பிரிவில் தலைப்புகள் மற்றும் பணிகளை இழுத்து விடுவதற்கான விருப்பத்தை அறிமுகப்படுத்தியது. 2020 ஆம் ஆண்டில், Google Meet உடன் சிறந்த ஒருங்கிணைப்பைச் சேர்த்தது, இதனால் ஆசிரியர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் தனிப்பட்ட சந்திப்பு இணைப்பைப் பெற முடியும் இதற்கு கூடுதலாக, வகுப்பறையில் பல அம்சங்கள் சேர்க்கப்பட்டன, கூகிள் மாற்றமடைந்து வரும் மெய்நிகர் கல்விக்கேற்ப தனது தயாரிப்புக்களிலும் மேம்பட்ட வசதிகளைக் ஏற்படுத்திவருகின்றது. அதாவது உலகளாவிய கல்வியில் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வசதியாக கூகிள் தனது கருவிகளை மாற்றியமைத்து வருகிறது.

2020 ஆம் ஆண்டில், கொவிட் - 19 தொற்றுநோய் தீவிரமாக பாடசாலைகளை முடக்கிய போது பல பாடசாலைகள் தொலைதூரக் கல்விக்கு வேகமாக மாறின இதன் போது கூகுள் வகுப்பறையின் பயன்பாடு வேகமாக அதிகரித்தது. தற்போது கூகுள் கிளாஸ்ரூம், கூகுள் டிரைவ், கூகுள் டாக்ஸ், கூகுள் தாள்கள், கூகுள் ஸ்லைடுகள், கூகுள் படிவங்கள், கூகுள் தளங்கள், ஜிமெயில் போன்றவற்றை ஒருங்கிணைக்கிறது. கூகுள் கலண்டர் பின்னர் ஒதுக்கப்பட்ட திகதிகள், களப்பயணங்கள் மற்றும் வகுப்பு நிகழ்ச்சிகளுக்கு உதவுவதற்காக சேர்க்கப்பட்டது.

இதனால் ஆசிரியர்கள் - மாணவர் அல்லது மாணவர் - மாணவர் இடையே ஒத்துழைப்பை அனுமதிக்கும் வசதிகளும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக தற்போது கிடைக்கும் வசதியில் மாணவரின் கூகுள் டிரைவில் இருக்கும் ஆவணங்களை ஆசிரியருடன் பகிர்வதற்குப் பதிலாக, கோப்புகள் மாணவரின் டிரைவில் ஹோஸ்ட் செய்யப்பட்டு, தரப்படுத்தலுக்குச் சமர்ப்பிக்கப்படும். ஆசிரியர்கள் ஒரு டெம்ப்ளேட்டாகக் கருதப்படும் ஒரு கோப்பைத் தேர்வு செய்யலாம், இதனால் ஒவ்வொரு மாணவரும் தங்கள் சொந்த நகலைத் திருத்தலாம், பின்னர் அனைத்து மாணவர்களும் ஒரே ஆவணத்தைப் பார்க்க, நகலெடுக்க அல்லது திருத்த அனுமதிக்கலாம் போன்ற வசதிகள் காணப்படுகின்றன.



கூகுள் கிளாஸ்ரூம் பல்வேறு மதிப்பீட்டு திட்டங்களை ஆதரிக்கிறது. மாணவர்கள் பார்க்க, திருத்த அல்லது தனிப்பட்ட நகலைப் பெறக்கூடிய கோப்புகளை ஒதுக்கீட்டில் இணைக்க ஆசிரியர்களுக்கு வாய்ப்பு உள்ளது. கோப்பின் நகல் ஆசிரியரால் உருவாக்கப்படவில்லை என்றால் மாணவர்கள் கோப்புகளை உருவாக்கி, அவற்றைப் பணியுடன் இணைக்கலாம். பணியின் ஒவ்வொரு மாணவரின் முன்னேற்றத்தையும் கண்காணிக்க ஆசிரியர்களுக்கு விருப்பம் உள்ளது, அங்கு அவர்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் மற்றும் திருத்தலாம். பணியை மாற்றியமைப்பது ஆசிரியரால் தரப்படுத்தப்பட்டு, மாணவர் பணியை மறுபரிசீலனை செய்வதற்கும், திரும்பிச் செல்வதற்கும் அனுமதிக்கும் வகையில் மாற்றலாம்.

கூகுள் கிளாஸ்ரூம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே இருவழித் தொடர்பை அனுமதிக்கும் மாணவர்களால் கருத்து தெரிவிக்கக்கூடிய வகுப்பு வசதிகள் உண்டு, ஆசிரியர்களால் அறிவிப்புகள் வெளியிடப்படலாம்.

மாணவர்கள் கிளாஸ் ஸ்ட்ரீமில் இடுகையிடலாம் ஆனால் ஆசிரியரின் அறிவிப்பைப் போல அதிக முன்னுரிமை அளிக்கப்படாது, மேலும் அதை மதிப்பிட லாம். மேலும் இதனை Android மற்றும் Classroom மொபைல் பயன்பாடுகள் வழியாக அணுகலாம்.

கூகுள் கிளாஸ்ரூமில் 2020 மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டின் அடிப்படையில் மாணவர்களின் சமர்ப்பிப்புக்களின் அசல் தன்மையை பரிசோதிக்க முடிகிறது. கல்வியாளர்கள் மற்றும் மாணவர்கள் சமர்ப்பித்த படைப்பின் பகுதிகள் மற்றும் பிரிவுகளை இதன்வழி பார்க்க இது அனுமதிக்கிறது, அதில் மற்றொரு மூலத்தின் சரியான அல்லது ஒத்த சொற்கள் உள்ளனவா என்பதை அது தெரிவிக்கிறது. மாணவர் அவர்களின் எழுத்தை மேம்படுத்துவதற்கு இது உதவுகிறது எனலாம். ஆதார நூல்கள் மற்றும் விடுபட்ட மேற்கோள்களை இது எடுத்துக்காட்டுகிறது. ஆசிரியர்கள் அசல் அறிக்கையைப் பார்க்கலாம், அதாவது மாணவர் சமர்ப்பித்த பணியின் கல்வித் தன்மையை சரிபார்க்க அனுமதிக்கிறது.

ஆசிரியர்கள் ஆண்டின் இறுதியில் பாடப்பரப்புக்களை தமது கற்பித்தல் ஆவணங்களை ஆவணக் காப்பகத்தில் காப்பகப்படுத்த அனுமதிக்கிறது. ஒரு பாட நெறி காப்பகப்படுத்தப்படும் போது, ஆசிரியர்களும் மாணவர்களும் அதைப் பார்க்க முடியும், ஆனால் அது மீட்டெடுக்கப்படும் வரை அதில் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கூகுள் கிளாஸ்ரூம் வகுப்பறையின் பயன்பாட்டின் எளிமை, உலகளாவிய சாதன அணுகல், ஆசிரியர்கள் மாணவர்களுடன் பணிகளை விரைவாகப் பகிர்வதற்கான ஒரு சிறந்த வழியாக இதனைப் பயன்படுத்த முடி




யும். காகிதமில்லாச் செயல்முறை, அச்சிடுதல், ஒப்படைத்தல் போன்ற வேலைகளை இல்லாது செய்கிறது. கூகுள் கிளாஸ்ரூம் உலகளவில் கூகிளின் முக்கியத்துவத்தின் காரணமாக, அதாவது கூகுள் அமைப்பைப் பற்றி பலர் அறிந்திருப்பதால், மாணவர்கள் கூகுள் வகுப்பறையை எளிதாக அணுகும் ஒன்றாகப் பார்க்கிறார்கள்.

# முல்லைத்தீவில் ஆயுதங்கள் மீட்பு

போர்க்காலத்தின்போது முல்லைத்தீவு, அம்பலவன்பொக்கணைப் பகுதியில் புதைக்கப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஏ.கே. 47 துப்பாக்கி, மகசின்கள் - 4 மற்றும் துப்பாக்கி ரவைகள் 210 என்பன மீட்கப்பட்டுள்ளன.

இவை, நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டு, முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. மனிதக் கொலை மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் உள்ள பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

# ராஜபக்ஷ அரசை விரட்டியடிக்க நாட்டு மக்கள் தயாராகிவிட்டனர்

## ஜே.வி.பியின் விஜித ஹேரத் கூறுகின்றார்



ராஜபக்ஷ அரசாங்கத்தை விரட்டியடித்து, மக்கள் நல அரசாங்கத்தை உருவாக்குவதற்கு அனைத்து இன மக்களும் தயாராகிவிட்டனர் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஹற்றன் நகரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த அவர், இந்த அரசை விரட்டியடித்து, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஆட்சியை உருவாக்க தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்து இன மக்களும் தயாராகிவிட்டனர். நாளை வேண்டுமானாலும் அவர்கள் இதனைச் செய்வார்கள் எனக் கூறியுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

"நாட்டில் தற்போது எரிவாயு அடுப்புகள் வெடித்து சிதறிவருகின்றன. இதற்கான காரணங்களை கண்டறிந்து தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசு துரிதம் காட்டவில்லை.

'மாறாக எரிவாயு அடுப்பு வெடிப்புக்கும், எரிவாயு கொள்கலன்களுக்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் இல்லையென ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டுவருகின்றனர்.

'இப்படியான கருத்துகளை முன்வைத்து, தமது இயலாமையையும், பலவீனத்தையும் மறைக்க செயற்பட்டு வருகின்றனர்" என்றார்.

# இலங்கை பல்தேசங்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் உண்மைகள் புரியத் தொடங்கும்போது ஒரு சிங்களவர் எழுந்து கருணையையும் அன்பையும் அகிம்சையையும் போதிக்கும் புத்தர் பெருமானை நான் பின் தொடர்கிறேன். பூசிக்கிறேன். ஆனால், எங்களது பெயரினால் இப்படியான கொடூரங்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்றதெனில் அந்த மக்களுக்கு அவர்கள் விரும்புகின்ற பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறுவர் என நம்புகின்றேன்.

உங்கள் பாதையை நீங்கள் மாற்றிக்கொள்ளாதுவிடின் நிச்சயம் அப்படி ஒரு நிலைமை உருவாகும். தமிழர்கள் யாருக்கும் எதிரிகள் அல்லர். அவர்கள் யாருக்கும் எதிராக போருக்கும் முன்வரவில்லை. அவர்கள் கேட்பது எல்லாம் தமக்கே உரித்தான உரிமைகளை மட்டும்தான். அதற்காகத்தான் கடந்த 75 வருடங்களாக அவர்கள் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இலங்கை ஒரு நாடாக ஸ்திரத்தன்மையுடன் தொடர்ந்தும் இருக்க வேண்டுமெனில் நீங்கள் கடந்த 74 வருடங்களாக செல்லும் அதே பாதையில்தொடர்ந்தும் செல்ல முடியாது. இலங்கை ஒரு பல்தேசங்கள் கொண்ட நாடென்பதை ஏற்றுக்கொள்ளாத வரைக்கும் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதை அங்கீகரிக்காத வரைக்கும் நீங்கள் எங்களை மட்டுமல்லாது உங்களையும் சேர்த்தே அழிக்கப்போகின்றீர்கள் என்பதை மீண்டும் தெரிவித்துகொள்கின்றேன் - என்றார்.

# இலங்கை முஸ்லிம்களை ......

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹினி கவிரத்தினவின் தந்தை மற்றும் கணவரும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்களாவர். அவர் பெண் என்ற ரீதியில் பல விடயங்களை மிகவும் துணிகரமாக பேசுபவர். அண்மையில் அவ்வாறு நாடாளுமன்றத்தில் எழுந்து நின்று பேசுகையில், எங்களது புதிதாக வந்த இளம் உறுப்பினரொருவர் தலையிட்டுச் சொன்ன விவகாரம் இன்று மிகப் பெரிய பூதாகரமாக வெடித்துள்ளது.

சிலேடையாக அவர் கூறிய விடயம் இன்று பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. அந்த விவகாரம் பெண்களுக்கு மிக ஆத்திரத்தை ஏற்படுத்துகின்ற விடயமாக மாறி, விடயம் தெரியாமல் உளறிக் கொட்டிய அந்த நாடாளுமன்ற உறுப்பினரை சமூக வலைத்தளங்களில் கிழித்து வாங்குகின்றார்கள்.

பெண்கள் மீது பிரயோகிக்கும் தேவையற்ற வசனங்கள் என்ற விவகாரம் மிகவும் கண்டனத்திற்குரிய விடயமாக மாறியுள்ளது. இவ்வாறாக இந்த நிலைமை இலங்கை நாடாளுமன்றத்திற்குள்ளும் காணப்படுகின்றது.

இவ்விடயத்திற்காக நான் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரை மன்னிப்புக் கேட்க சொல்ல வேண்டுமென சபாநாயகரிடம் சொன்னேன். சம்பந்தப்பட்டவர் மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார். நான் சில வருட காலம் அந்த சபைக்குத் தலைமை தாங்கியவன் என்ற அடிப்படையில், குறைந்தபட்சம் உங்களுக்குள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரை ஒரு நாளைக்காவது நாடாளுமன்றத்திற்கு வருகை தராமல் செய்து அடையாள ரீதியான தண்டனையையாவது வழங்குங்கள் எனக் கூறினேன். அதையும் அவர் செய்யவில்லை.

பெண்களுக்கு மத்தியில் இவ்விடயம் பேசுபொருளாக ஓங்கியுள்ளது.

இந்த யுகம் மிகவும் வித்தியாசமானது. பெண்கள் சம்பந்தமான விடயங்களை தாங்கள் தான் நிர்வகிக்க வேண்டுமென ஆண்கள் நினைப்பது குடும்பத்தை மையப்படுத்தியே கூறப்பட்ட விடயமாகும். உழைக்கின்ற ஆண் குடும்ப நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பான் என்பதே இதன் கருத்தாக உள்ளது. இதர விடயங்களிலும் அவ்வாறு பின்பற்ற வேண்டிய கட்டாயம் இல்லை. அதுபற்றிய திருக்குர்ஆன் வசனத்திற்கு சிலர் வித்தியாசமாகப் பொருள் கோடல் செய்கின்றனர். மேலும், எந்தத் தலைமைப் பதவிக்கும் பெண்கள் சரிவராது என்ற சொல்லுகின்ற காலமாகப் பார்க்க முடியாது. எங்கும் பெண்களுடைய தலைமைத்துவம் இருக்கின்றது. எத்தனையோ ஆண்கள் பாடசாலைகளுக்கு பெண்கள் அதிபராக இருக்கின்றார்கள். அரசியலில் கூட பெண்கள் உள்வாங்கப்படக் கூடாது எனக் கூறுவது இப்போது இருக்கின்ற சூழலுக்கு ஒவ்வாத விடயமாகவே கருதப்படுகின்றது. அது பெண்களது வளர்ச்சிக்கு தடைபோடுகின்ற விடயமாக மாறிவிடுகின்றது. மேலும் இது சம்பந்தமான தவறான பார்வையை மாற்று சமூகத்தவர் மத்தியில் ஏற்படுத்திவிடுகின்றது.

இப்போது நாங்கள் செய்யத் தவறிய ஒரு விடயத்தை வைத்துக் கொண்டு, இன்றைய ஆட்சியாளர்கள் வேண்டுமென்று இந்நாட்டில் இடம்பெறக்கூடிய சகல விதமான தீவிரவாதத்திற்கும் காரணம் முஸ்லிம்களது தனியார் சட்டமெனச் சொல்கின்றார்கள். முஸ்லிம்களது விவாக, விவாகரத்து சட்டத்தை திருத்துகின்ற விவகாரத்தில் தேவையில்லாமல் ஆன்மீக மற்றும் அரசியல் தலைமைகளும் இழுத்தடிப்புச் செய்தமையே இன்று குரங்கின் கையில் பூமாலையாக மாறியுள்ளது. இப்போது ஆட்சியாளர்கள் தமக்கேற்றவாறு தயார்படுத்தவும், திரிவுபடுத்தவும் எமது குறைகளை அலசி ஆராய்கின்றனர்.

நீதி அமைச்சரும் பெரும் தடுமாற்றத்தில் இருக்கின்றார். அவரைக் குறை சொல்லவும் முடியாது. நானும் நீதி அமைச்சராக இருந்தவன் என்ற அடிப்படையில் என்னுடைய அமைச்சுக் காலத்திலும் கூட அதனை சரிசெய்ய முற்பட்டோம். பிரதம நீதியரசருடன் இணைந்து குழுவொன்று நியமித்து , அதற்கான இறுதி அறிக்கையை தயாரித்த போது ஆதரவாகவும், எதிராகவும் ஒன்பதுக்கு ஒன்பதாக இரண்டாகப் பிரிந்து விட்டார்கள். அதை வைத்துக்கொண்டு அவ்விவகாரம் இழுபறியானது. இடையில் சஹ்ரான் செய்த நாசகாரச் செயலால் இன்று நிலைமை தலைகீழாகியுள்ளது. அதனை இலகுவாக விட்டுக்கொடுக்கவும் முடியாது. போராடத்தான் வேண்டும்.

ஆனால், இதில் எங்கு பிழை இருக்கின்றது என்று பார்த்தால், எங்களது தேவையற்ற இழுபறிகள் காரணமாகத் தான் இதனைச் சரி செய்ய முடியாதுள்ளது. சில விடயங்களை பொறுத்தமட்டில் கட்டாய விட்டுக்கொடுப்புக்களைச் செய்து தான் ஆகவேண்டியுள்ளது. இப்போது எல்லோரும் வந்து மூக்கு நுழைக்கின்ற விடயமாக நாங்களாகவே இதனை ஆக்கிவிட்டோம். இப்போது இருக்கின்றதையும் பறிகொடுக்கக் கூடிய நிலைமை வந்துவிடாமல் எப்படியாவது எங்களுடைய தனியார் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும்.

மத்ரஸா பாடத்திட்டத்திலும் திருத்தங்களை மேற்கொள்ள முற்படுகின்றார்கள்.

முஸ்லிம்கள் மத்தியில் ஒவ்வொரு விதமான சிந்தனா வட்டங்கள் இருக்கின்றன. விதவிதமான கொள்கைகளின் அடிப்படையில் மேற்கொண்ட பாட விதானங்களை ஒருசேர அமைக்க வேண்டுமென நீண்ட காலமாக முஸ்லிம் சமய,கலாசார விவகாரத் திணைக்களம் ஈடுபட்டிருக்கின்றது. அதற்கான நல்ல பரிந்துரைகளை செய்தும் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்தன. அவ்வாறிருக்க, இப்பொழுது அரபு மதரஸாக்களுக்கு மூடுவிழா நடத்துவதற்கு அரசாங்கம் எத்தனித்து வருகின்றது.

வெளிநாட்டிலிருந்து பயங்கரவாதத்தை ஆய்வு செய்வதற்கென பேராசிரியர்கள் சிலரை இங்கு வரவழைத்துள்ளனர். ஜாமிஆ நளீமிய்யா தொடர்பிலும் கூட தேடிப் பார்க்கின்றனர். தேவையற்ற விபரீதங்களை இன்று முஸ்லிம்களுக்கு மேல் கொண்டுவருவதற்கான எத்தனங்கள் நடந்துகொண்டு இருக்கின்றன. இவற்றிலிருந்து மீள்வதற்கு எங்களுக்கு மத்தியிலும் மிக பக்குவமாகவும் நேர்மையாகவும் வாதாடிப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் இல்லாமல் இல்லை. ஆனால், அவற்றைப் பயன்படுத்தி இன்றிருக்கின்ற சூழலில் சில சக்திகள் முரண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களை பாரம்பரிய முஸ்லிம்கள், பாரம்பரியமற்ற முஸ்லிம்கள் என இரண்டு பிரிவாக வேறுபடுத்திக் காட்டுவதற்காக ஒரு சிலர் முயற்சித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அதற்காகத் தான் ஒரு நாடு; ஒரு சட்டம் செயலணியொன்றை அமைத்துக் கொண்டு மாவட்டம் மாவட்டமாக கூட்டம் நடத்தி திரிகின்றார்கள். இந்த விவகாரம் பெரும்பான்மை சமூகத்தவரிடத்திலும் கூட பலத்த கண்டனத்திற்கு ஆளாகியுள்ளது.

அண்மைக்காலமாக இடம்பெற்று வரக்கூடிய சம்பவங்கள் தொடர்பில் சற்று ஆறுதலளிக்கின்ற வகையில் அஸாத் ஸாலியின் விடுதலை அமைந்துள்ளது. மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பு மிகவும் நேர்மையாக அமைந்திருந்தது. முஸ்லிம்களை பழிவாங்குவதற்காக மேற்கொள்கின்ற நடவடிக்கைகளுக்காக நாங்கள் செல்ல இருக்கின்ற ஒரே இடம்தான் நீதிமன்றம். இன்று முதுகெலும்புள்ள நீதிபதிகளும் இருக்கின்றார்கள்.

அஸாத் ஸாலியின் வழக்கில் மேல்நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு கன்னத்தில் அறைந்ததைப் போன்று சொல்லப்பட்டிருந்தது. அவருடைய ஆறுதலுக்காக நான் இரண்டு நாள்கள் வழக்காடுகின்ற இடத்தில் போய் அமர்ந்து விசாரணையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். சாட்சியங்களை நெறிப்படுத்துகின்ற போது நீதிபதி இதிலுள்ள உள்நோக்கங்கள் வேறு என்பதை உணர்ந்து கொண்டார் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. தீர்ப்பைப் பார்த்த போது மிகவும் சந்தோசப்பட்டேன்.

இந்த விவகாரத்தில் பொய் குற்றச்சாட்டைக் கொண்டு வந்தவர்களை நீதிமன்றம் விசாரணைக்கு அழைத்துள்ளது.

வெறுப்புப் பேச்சைக் குற்றமாகச் செய்ய சட்டமூலம் கொண்டுவந்த நோக்கம் வேறு. அதனை இவர்கள் பிரயோகிக்கும் முறை வேறு. அஸாத் ஸாலி கூறியதை வைத்து இனங்களுக்கிடையில் பிரிவினையை கொண்டு வருகின்றார் என வியாக்கியானம் கொடுத்து அவரைத் தண்டிக்க முற்பட்டார்கள். அதற்கு நீதிமன்றம் இடமளிக்கவில்லை.

அதுமட்டுமல்லாது, அண்மையில் விலங்குகளுக்கு எதிராக வன்முறை செய்யக் கூடாதென்ற சட்டத்தைப் பாவித்து யானைகளை பலவந்தமாக வைத் திருக்கக் கூடாது என வழக்குத் தொடரப்பட்டது. யானைகளை உரியவர்களுக்கு கையளிக்க வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்தது. உயர்நீதிமன்றம் இதனால் சட்டமா அதிபரை கண்டித்து இருக்கின்றது. அமைச்சரவை தீர்மானத்திற்கமைய வழக்குகளை வாபஸ் பெற முடியாது. அவர்களுக்கிருக்கின்ற சமூகக் கடமையை சிந்தித்து அவர்கள் அதில் செயற்பட வேண்டுமென மிக தெளிவான தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடுமையான விமர்சனமாக அந்த தீர்ப்பு வந்திருக்கின்றது. இவை நாட்டில் நீதித்துறையில் ஒருவிதமான நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது என்றார்.

தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கௌரவ அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன்ஆகியோரும், திருச்சி மௌலவி ஜலீல் சுல்தான்,தமிழக ஊடகவியலாளர் சாஹூல் ஹமீது, முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், முஸ்லிம் சமய பண்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் முன்னாள் இராஜதந்திரி எம்.அன்சாா ஆகியோர் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய பஸ் நிலையத்திலிருந்து வெளிமாவட்ட சேவையில் ஈடுபட வடக்கு பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு ஆளுநர் அழுத்தம்

## நல்ல முடிவை எடுக்குமாறு கூறி கூட்டத்திலிருந்து வெளியேறினார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடுவது தொடர்பில் ஆளுநர் தலைமையில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலும் இணக்கம் இன்மையால் கூட்டத்தில் இருந்து வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்.மாநகர மேயர் ஆகியோர் வெளியேறினர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சேவையில் ஈடுபடும் பஸ் களுக்கான பஸ் நிலையம் மத்திய பஸ் நிலை யத்தில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் புதிதாக அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட நாள் முதல் அங்கிருந்து தாம் சேவையில் ஈடுபடமாட்டோம் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்தியசாலைகளின் தொழிற் சங்கங்கள் மறுத்து வருவதால், அவர்கள் அங்கிருந்து சேவையில் ஈடுபட்டால் மாத்திரமே நாமும் அங்கிருந்து சேவையில் ஈடுபடுவோம் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களும் தெரிவித்து வருகின்றன.

அதனால் புதிய பஸ் நிலையம் பயன்பாடு இல்லாமல் காணப்படுகின்றது. இந்த விடயத்துக்குத் தீர்வு காணும் நோக்கில் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தனது அலுவலகத்துக்கு இ.போ.ச. வடபிராந்திய அலுவலகத்தின் பிரதிநிதிகளை பேச்சுக்கு அழைத்தார்.

சந்திப்பிற்கு யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணனும் அழைக்கப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில், இ.போ.ச. பிரதிநிதிகள் புதிய பஸ் நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபட மறுப்புத் தெரிவித்தனர்.

அதையடுத்து ஆளுநர், மக்களின் வரிப்பணத்தை வீணடிக்க முடியாது. தனி நபர், குழுக்களின் சுயலாபத்துக்காக புதிய பஸ் நிலையத்தைத் தேடுவாரற்று விட முடியாது எனக் கூறி நல்லதொரு முடிவாக எடுங்கள் எனக் கூறி விட்டு கூட்டத்தை விட்டு வெளியேறினார். இதனைத் தொடர்ந்து மாநகர மேயரும் வெளியேறினார்.



அதனால் இ.போ.ச. பிரதிநிதிகள் ஆளுநர் அலுவலகத்தினுள் நீண்ட நேரம் காத்திருந்துவிட்டு வெளியேறினர். தங்கள் மீது ஆளுநர் முறையற்ற அழுத்தம் தருகின்றார் என அவர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம் இ.போ.சபையினர் ஓர் இணக்கத்துக்கு வராத போதும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் எதிர்வரும் புதன்கிழமை முதல் புதிய பஸ் நிலையத்துக்கு செல்ல இணங்கும் அதேநேரம், இதற்கு பொதுமக்களும் ஊடகங்களும் தமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்

# இங்குள்ள தமிழ் மக்களுக்கு அரசுதான் தீர்வை வழங்கும்

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



இலங்கையிலுள்ள தமிழ் மக் களுக்கு அரசுதான் தீர்வை வழங்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்தியா இருக்கின்றது; எமக்குத் தீர்வைத் தரும் என்று தமிழ் மக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாற்றி வருகின்றது. அதன் வெளிப்பாடாகத்தான் மீண்டும் புதுடில்லிக்குச் செல்ல கூட்டமைப்பின் தலைவர்கள் முயல்கின் றனர். தமிழ் மக்களை இனியும் மடையர்களாக்க முயல வேண்டாம் என்று அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் இந்தியா செல்லவுள்ளது என வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா, இலங்கை உள்ளிட்ட பல நாடுகள் மீண்டும் கொரோனாவின் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளன. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கொரோனாவுக்கு மத்தியிலும் தமது ஏமாற்று அரசியலை நடத்துகின்றனர்.

எந்த நாட்டுக்குச் சென்றாலும் தமிழ் மக்களுக்கு இலங்கை அரசுதான் தீர்வை வழங்கும்.

எந்த நாட்டின் அழுத்தங்களுக்கும் இலங்கை அடிபணியாது - என்றார்.

# வெளிநாடுகளை நாடுவதால் அரசியல் தீர்வு கிடைக்குமா?

## கூட்டமைப்பிடம் தினேஷ் கேள்வி

தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்பதே எமது அரசின் திட்டம். அதைவிடுத்து அமெரிக்காவையும், இந்தியாவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடுவதால் தீர்வு கிடைக்கப்போவதில்லை.

இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் இந் தியா செல்லவுள்ளது என வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு மக்கள் ஆணையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இருக்கின்றார்; பிரதமர் இருக்கின்றார். அதுமட்டுமன்றி மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடனான அரசு உள்ளது. இந்த மூன்று தரப்பினரும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் உறுதியாக உள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் நினைத்த மாதிரிச் செயற்படுகின்றனர்.

அவர்கள் வெளியகத் தீர்வை விரும்புகின்றனர். அதனால்தான் அவர்கள் அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஓடித்திரிகின்றனர்.

உள்நாட்டுப் பிரச்சினைக்கு உள்ளகத் தீர்வே அவசியம். அதைவிடுத்து வெளியகத் தீர்வைப் பெற முயற்சிப்பதால் எவ்விதப் பயனும் ஏற்படாது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கவனத்தில்கொள்ள வேண்டும் - என்றார்.

### மீண்டும் அருவருக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடமாக மாறிவிடுமோ என்று சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புதிதாக அழகுறச் செய்யப்பட்டுள்ள ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறந்து சில நாள்களுக்குள்ளேயே அங்கு குப்பைகள் வீசப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் நூற்றுக்கணக்கானோர் ஆரியகுளத்தைப் பார்வையிட வருவதால் அங்கு அதிக அளவில் சன நடமாட்டம் கூடுவதுடன் மைலோ பைக்கற்றுக்கள், தண்ணீர்ப் போத்தல்கள் அங்காங்கே வீசப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

இந்தவிடயத்தில் பொதுமக்கள் கரிசனை கொண்டு யாழ்ப்பாண மாநகர சபையால் அங்கு வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டியில் குப்பைகளைப் போட வேண்டும் எனசமூகஆர்வலர்கள் கேட்டுக்கொண்டனர்.

### அரிசி விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

மியன்மார் மாத்திரமல்ல, எந்த நாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தாலும் இந்த நிலைதான் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் காணப்படுகின்ற டொலர் நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியத்தை அன்றி சீனாவை நாடுவதால் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

### கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெட்டியபோது,

அது வெடித்ததில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

25 வயதுடைய சிவலிங்கம் யுவராஜ் என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவரது சகோதரனான சிவலிங்கம் நிலக்சன் என்ற 16 வயது சிறுவன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற வீட்டை சூழவுள்ள சில பகுதிகளிலும் ஆபத்தான வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

# அடுத்த தடவையும் கோட்டாவே வெற்றி

## அமைச்சர் ரோஹித நம்பிக்கை

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகளின் பொதுவேட்பாளராகச் சம்பிக்க ரணவக்க போட்டியிட்டால் சஜித் பிரேமதாஸ போல் நிச்சயம் படுதோல்வியடைவார். அடுத்த தடவையும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே களமிறங்குவார். அந்தத் தேர்தலிலும் அவர் அமோக வெற்றியடைவார்.

- இவ்வாறு அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகளின் பொதுவேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவைக் களமிறக்கத் தெற்கில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது எனவும், வடக்குக்கு தற்போது பயணம் மேற்கொண்டுள்ள சம்பிக்க ரணவக்க, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளார் எனவும் செய்தி வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-



கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாகுவதற்கு முன்னரே சஜித் பிரேமதாஸ நாட்டின் 24 மாவட்டங்களிலும் சூறாவளிபோல் சுற்றித் திரிந்தார்; தேர்தல் பிரசார மேடைகளில் பல் வேறு வாக்குறுதிகளை அள்ளி வீசினார். ஆனால், இறுதியில் அவர் மக்களால் தோற்கடிக்கப்பட்டார்.

சஜித் பிரேமதாஸ போல் ஜனாதிபதி பதவி ஆசையில் தற்போது சம்பிக்க ரணவக்கவும் கிளம்பியுள்ளார் போல் தெரிகின்றது. அவரும் சஜித் போல் படுதோல்வியடைவார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வரிசையில் சம்பிக்க மட்டுமன்றி பலபேர் களமிறங்கினாலும் அவர்களைத் தோற்கடித்து மீண்டும் ஜனாதிபதிக் கதிரையில் கோட்டாபய ராஜபக்ஷ அமருவார். சிங்கள - பௌத்த மக்களின் அமோக வாக்குகள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கே கிடைக்கும். அதை எவரும் தட்டிப் பறிக்க முடியாது - என்றார்.